ISSN: 2582–5518






# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






ஞாயிறு ❖ மார்ச். 03, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 145 ❖ ரூ.10

### வாரணாசியில் மோடி மீண்டும் போட்டி - 195 வேட்பாளர்கள் உடன் பாஜக முதல்கட்ட பட்டியல்

# வெளியீடு

## உள்துறை அமைச்சர் அமித் ஷா குஜராத்தின் காந்தி நகர் தொகுதியிலும், சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவிய போர்பந்தர் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

**புதுடெல்லி , மார். 3–**

**மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் 195 வேட்பாளர்கள் அடங்கிய முதல்கட்ட பட்டியலை பாஜக வெளியிட்டுள்ளது. பிரதமர் மோடி மீண்டும் வாரணாசி தொகுதியில் போட்டியிட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**



மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், 195 வேட்பாளர்கள் அடங்கிய முதல்கட்ட பட்டியலை பாஜக வெளியிட்டுள்ளது. டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாஜக தேசிய பொதுச் செயலாளர் வினோத் தாவ்டே, பாஜகவின் முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டார். அதன்படி, பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வாரணாசி தொகுதியில் போட்டியிடுகிறார்.

“195 வேட்பாளர்கள் அடங்கிய பட்டியல் தற்போது முடிவாகி இருக்கிறது. இது பாஜகவின் முதல்கட்ட வேட்பாளர் பட்டியல். 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வேட்பாளர்கள் இதில் இடம் பெற்றுள்ளார்கள். உத்தரப் பிரதேசத்தில் 51 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள், மேற்கு வங்கத்தில் 20, டெல்லியில் 5, கோவா மற்றும் திரிபுராவில் தலா ஒன்று என வேட்பாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள்.

இந்த முதல்கட்ட பட்டியலில் மத்திய அமைச்சர்கள் 34 பேர், மக்களவை சபாநாயகர், இரண்டு முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். 28 பெண் வேட்பாளர்கள், 47 இளம் தலைவர்கள் இந்தப் பட்டியலில் உள்ளார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி வாரணாசி தொகுதியில் மீண்டும் போட்டியிட இருக்கிறார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குஜராத்தின் காந்தி நகர் தொகுதியிலும், சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவிய போர்பந்தர் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் அசாமின் திப்ருகர் தொகுதியிலும், மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ அருணாச்சலப் பிரதேசம் (மேற்கு) தொகுதியிலும் போட்டிடுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த முடிவுகளை எடுத்துள்ளது. வரக்கூடிய மக்களவைத் தேர்தலில் பாஜக 370 தொகுதிகளிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்பதையே கட்சி சங்கல்பமாக எடுத்துள்ளது” என்று வினோத் தாவ்டே தெரிவித்தார்.



▶ மார்ச்-1 ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் அன்று புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தங்க மோதிரம் அணிவித்து பரிசு பெட்டகம் வழங்கினார். உடன் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா மற்றும் ஒன்றிய, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தை போதைப் பொருட்களின் விற்பனை மாநிலமாக மாற்றியுள்ளது திமுக : ஓபிஎஸ் கண்டனம்

சென்னை, மார். 3–

எதிர்காலத் தூண்களாகிய இளைஞர்களின் நலனில் முதல்வர் ஸ்டாலினுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை மேற்கொண்டவர்கள், இதன்மூலம் பயனடைந்தவர்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தி அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்ட அறிக்கையில், “திமுக ஆட்சி என்றாலே, குண்டு வெடிப்பு, கொலை, கொள்ளை, வன்முறை, தீவிரவாதம், பயங்கரவாதம், சமூக விரோதிகளின் நடமாட்டம் ஆகியவை அதிகரிப்பது வாடிக்கை என்றிருந்த நிலையில், தற்போது தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் போதைப் பொருட்களின் விற்பனை தலைவிரித்து ஆடிக் கொண்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தீய சக்திகளின் நடமாட்டம் தமிழ்நாட்டில் தீயாய் பரவிக்கொண்டிருக்கிறது.

கடந்தசில நாட்களுக்கு முன்பு, 2,000 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தில் சென்னை மேற்கு மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளரின் வீடு, தங்கும் விடுதி மற்றும் அலுவலகங்களில் மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு, முக்கிய ஆவணங்களை கைப்பற்றியதோடு, அவற்றிற்கு சீல் வைத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, தி.மு.க. மாவட்டச் செயலாளர் வீட்டில் சோதனை நடப்பதாக தகவல் வெளியானதையடுத்து, பத்திரிகையாளர்கள் அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற நிலையில், அவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் திமுகவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். இது கடும் கண்டனத்திற்குரியது. மொத்தத்தில், திமுகவினர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. திமுகவினரின் இந்தச் செயல் தமிழகத்தை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் செயலாகும்.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே இரு சக்கர வாகனத்தில் வந்த இருவரை பிடித்து விசாரணை செய்ததில், அவர்கள் கஞ்சா பொட்டலங்களை வாங்கி, அவற்றை சிறிய பொட்டலங்களில் வைத்து அதில் இனிப்புப் பண்டங்களை சேர்த்து பள்ளி மாணவர்களுக்கு விற்பனை செய்து கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில், டெல்லியிலிருந்து ரயில் மூலம் மதுரைக்கு கடத்தப்பட்ட 50 கோடி ரூபாய் மதிப்பிலான 30 கிலோ மெத்தபெட்டமின் போதைப் பொருளை வருவாய் புலனாய்வுத் இயக்குநரக அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். இளைஞர்களை போதைப் பொருளுக்கு அடிமையாக்கியதுதான் கடந்த மூன்று ஆண்டு கால திமுக அரசின் சாதனை.

எதிர்காலத் தூண்களாகிய இளைஞர்களின் நலனில் முதல்வர் ஸ்டாலினுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை மேற்கொண்டவர்கள் மற்றும் இதன்மூலம் பயனடைந்தவர்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தி அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், போதைப் பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்” என்று ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

## “மக்களவைத் தேர்தல் தொடர்பாக பாஜக – தமாகா முதல் சந்திப்பே ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்தது” – ஜி.கே.வாசன் பேட்டி

சென்னை : மார். 3–

“பாஜக - தமாகா இடையேயான முதல் சந்திப்பே ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்தது.” என்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.



மக்களவைத் தேர்தல் தொடர்பாக பாஜக மற்றும் தமாகா இடையேயான பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது. தொகுதி பங்கீடு தொடர்பாக பாஜக சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், எம்எல்ஏக்கள் நயினார் நாகேந்திரன் மற்றும் வானதி சீனிவாசன் போன்றோர் தமாகா தலைவர் ஜி.கே. வாசனை சந்தித்து ஆலோசனை நடத்தினர். ஆலோசனைக்கு பின் செய்தியாளர்களைச் சந்தித்த ஜி.கே. வாசன், “பாஜக - தமாகா இடையேயான முதல் சந்திப்பே ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்தது. தேர்தல், களப்பணி, வெற்றி வியூகம் தொடர்பாக இந்த சந்திப்பில் பேசினோம். தமாகா தேர்தல் குழு அமைத்தபின் முறைப்படி தொகுதி எண்ணிக்கை உள்ளிட்டவை குறித்து ஆலோசனை செய்யப்படும்.

நாளை முதல் 6ம் தேதி வரை தமாகா விருப்ப மனு பெறவிருக்கிறது. அதன்பின் பாஜக குழு தமாகா உடன் பேச்சுவார்த்தையை தொடங்கும். நாட்டு நலன் கருதி மத்தியில் நல்லாட்சி அமைய தேசப்பற்றோடு கூடிய கட்சிகள் கூட்டணியில் இணைய வேண்டும் என்று தமாகா கேட்டுக்கொள்கிறது. மாநில கட்சிகள் நாட்டின் மீது அக்கறை கொண்ட கட்சியாக செயல்படக்கூடிய முக்கிய தருணம் இது. மூன்றாவது முறையாக பிரதமர் மோடி தலைமையில் ஆட்சி அமைய மாநில கட்சிகள் சிந்தித்து செயல்பட்டு நல்ல முடிவை நாட்டு நலன் கருதி எடுக்க வேண்டும்.

இந்தியா கூட்டணி முரண்பாட்டின் மொத்த வடிவமாக உள்ளது. அந்த கூட்டணியின் கருத்து வேறுபாடும், திறனற்ற செயல்பாடும் நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் அவர்கள் மீதுள்ள நம்பிக்கையை குறைத்துக்கொண்டு போகிறது. தமிழகத்தில் போதைப்பொருளை தடுக்க முடியாத அரசாக திமுக அரசு உள்ளது.” என்று ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

## பெங்களூரு குண்டுவெடிப்பைத் தொடர்ந்து டெல்லியில் உஷார் நிலை

புதுடெல்லி : மார். 3–

பெங்களூரு ராமேஸ்வரம் கஃபேவில் நடந்த குண்டுவெடிப்பில் 10 பேர் காயமடைந்த நிலையில், தேசியத் தலைநகர் டெல்லியில் கண்காணிப்பு உஷார்படுத்தப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள் குறிப்பாக டெல்லியிலுள்ள சந்தை பகுதிகளில் கண்காணிப்பை அதிகப்படுத்தும்படி மாவட்ட காவல்துறை தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து மூத்த காவல் அதிகாரி கூறுகையில், “டெல்லியுள்ள சந்தைச் சங்கங்கள் மிகுந்த விழிப்புடன் இருக்குமாறும், சந்தேகத்து இடமான நபர்களின் நடமாட்டம் தெரிந்தால் உள்ளூர் காவல்நிலையத்துக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள்.




அதேபோல் சந்தை வளாகங்களில் பொறுத்தப்பட்டுள்ள கண்காணிப்பு காமராக்கள் வேலைசெய்வதை உறுதி செய்து கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார். மற்றொரு அதிகாரி கூறுகையில், “டெல்லி காவல்துறை அதன், வெடிகுண்டு செயலிழப்பு படை மற்றும் வெண்டிகுண்டு கண்டறியும் குழுவை உஷார் நிலையில் இருக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது” என்றார். முன்னதாக, பெங்களூரு ஒயிட்பீல்டு ராமேஸ்வரம் கஃபேவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் திடீரென பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்து சிதறியது. இதில் உணவக பணியாளர்கள் இருவர் உட்பட 7 வாடிக்கையாளர்கள் படுகாயம் அடைந்தனர். அதில் 2 பேர் ஐடி நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்கள் என மொத்தம் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

வாடிக்கையாளர் ஒருவர் கை கழுவும் இடத்தில் வைத்துவிட்டுச் சென்ற கைப்பை ஒன்றில் டைமர் பொருத்தப்பட்ட மேம்படுத்தப்பட்ட வெடிகுண்டு ஒன்று வெடித்துள்ளதாக பெங்களூரு போலீஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச்சட்டம் மற்றும் வெடிகுண்டுகள் சட்டத்தின் கீழ் உள்ளூர் போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## “வேலூரில் ஒரே தெருவில் இயங்கும் மதுபானக் கடைகளை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்” – டிடிவி தினகரன்

சென்னை : மார். 3–

வேலூர் மாவட்டம் காகிதப்பட்டறை பகுதியில் ஒரே தெருவில் இயங்கும் ஆறு மதுபானக் கடைகளால் சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகள் அதிகரித்துள்ளது. பொதுமக்களை பாதிப்புக்குள்ளாக்கும் மதுபானக் கடைகளை அகற்ற தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்ட அறிக்கையில், “வேலூர் மாவட்டத்துக்குட்பட்ட காகிதப்பட்டறை பகுதியைச் சேர்ந்த 28வது வார்டில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் மட்டும் ஆறு மதுபானக் கடைகள் இயங்கி வருவதால் அப்பகுதி குடியிருப்புவாசிகள் நாள்தோறும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருவதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஒரே தெருவில் இயங்கும் ஆறு மதுபானக் கடைகளால் சட்டம் - ஒழுங்கு பிரச்னைகள் அதிகரித்துள்ளது. பொதுமக்களை பாதிப்புக்குள்ளாக்கும் மதுபானக் கடைகளை அகற்ற தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

மதுக்கடைகள் திறக்கப்படும் நேரம் தொடங்கி வார்டு முழுவதுமே மது குடிப்பவர்களால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதால், வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழல் நிலவுவதாகவும், இது தொடர்பாக பலமுறை புகார் அளித்தும் மதுபானக் கடைகளை அகற்ற மாவட்ட நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதியில் வசிக்கும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான குடியிருப்புவாசிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

வீதிக்கு வீதி திறக்கப்பட்டிருக்கும் மதுக்கடைகளால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருப்பதோடு, தமிழ்நாட்டில் வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்திருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டத்தை அரசு தடுக்க தவறியதன் விளைவாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒரே நாளில் மட்டும் மதுரை மற்றும் சென்னையில் ரூ.180 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இயங்கிவரும் மதுபானக் கடைகளைக் கணக்கெடுத்து அவற்றை உடனடியாக மூட நடவடிக்கை எடுப்பதோடு, மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தை சிதைக்கும் போதைப் பொருட்களின் தாராள நடமாட்டத்தை இனியாவது தீவிர சோதனையின் மூலம் கண்டறிந்து அவற்றை முற்றிலுமாக ஒழிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்” என்று டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

# இன்று

3-3-2024

அஷ்டமி

மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோயில் – அனைத்து ஐஸ்வர்யங்களும் அருளும் ஆலயம்.
சக வருடம் 1945 பால்குன 13

| சோபகிருது மாசி 20 | MAR - SUN ஞாயிறு | ஷ:பான் 21 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 063 / 303 | |

தேய். அஷ்டமி 54.13 (கா. 04.09) அனுஷம் 13.25 (கா. 11.50) தியாஜ் 27.16 மரண. ராமநாதபுரம் ஸ்ரீமுத்தாலம்மன் புறப்பாடு. திருக்கோகர்ணம், திருவைக்காவூர், காளஹஸ்தி, ஸ்ரீசைலம் இத்தலங்களில் ஸ்ரீசிவபெருமான் உற்சவாரம்பம். சிறிய நகசு.

| | நல்லநேரம் | கௌரி நல்ல நேரம் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; கும்ப லக்கனம் இருப்பு நா. 1 வி. 44; சந்திராஷ்டமம் அசுபதி பரணி; கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.28

[illegible]

இராசிபலன்: மேஷம் - நட்பு; ரிஷபம் - நன்மை; மிதுனம் - லாபம்; கடகம் - உதவி; சிம்மம் - வரவு; கன்னி - நிறைவு; துலாம் - தேர்ச்சி; விருச்சி - சினம்; தனுசு - பாசம்; மகரம் - அசதி; கும்பம் - முயற்சி; மீனம் - பரிவு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தேர்தல் பணிக்கு சேலம் வந்த மத்திய தொழில் பாதுகாப்பு படை

சேலம் : மார். 3-

தேர்தல் பாதுகாப்பு பணிக்காக மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் சேலம் வந்தனர்.

நாடாளுமன்ற தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. சில மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தலும் சேர்த்து நடத்தப்பட உள்ளது. நாடாளுமன்ற தேர்தலை சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் நடத்த, தேர்தல் பாதுகாப்பு பணியில் பல்வேறு படை பிரிவுகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 3.4 லட்சம் மத்திய ஆயுத போலீஸ் படை வீரர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



தமிழகத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொச்சியில் உள்ள துறைமுகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த மத்திய தொழில் பாதுகாப்பு படையை சேர்ந்த கம்பெனி, ரயில் மூலம் கோவைக்கு வந்தது. அங்கிருந்து சேலம் தேர்தல் பாதுகாப்பு பணிக்கு, மத்திய தொழில் பாதுகாப்பு படை ஒரு கம்பெனியினர் (92 பேர்) சேலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களை சேலம் மாநகர போலீசார், போலீஸ் வாகனத்தில் கோவைக்கு சென்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சேலத்துக்கு அழைத்து வந்தனர்.

சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள சிஎஸ்ஐ சர்ச் எதிரில் உள்ள மாணவர்கள் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், இவர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இதுகுறித்து போலீசார் கூறுகையில், 'நாடாளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதும், மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் பறக்கும்படை, சுங்கச்சாவடிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் படுவார்கள். தொடர்ந்து தமிழ்நாடு சிறப்பு படை, மத்திய பாதுகாப்பு படையினரும் பாதுகாப்பு பணிக்கு வரவுள்ளனர்' என்றனர்.

# ராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் நவாஸ் கனி மீண்டும் போட்டி : ஐயுஎம்எல் அறிவிப்பு

திருச்சி : மார். 3-

வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் தற்போதைய எம்.பி.யான நவாஸ் கனியே மீண்டும் போட்டியிடுவார் என இந்தியயூனியன் முஸ்லிம் லீக் கட்சி அறிவித்துள்ளது.

திமுக கூட்டணியில் இந்தியயூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ராமநாதபுரம் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்சியின் வேட்பாளராக நவாஸ் கனி மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



திருச்சியில் நேற்று நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் பொதுக்குழு கூட்டத்துக்குப் பின் காதர் மொய்தீன் அளித்த பேட்டியில், பொதுக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விவரித்த அவர், "ராமநாதபுரம் தொகுதியில் திமுக கூட்டணியில் தற்போதைய எம்.பி.யான நவாஸ் கனியே மீண்டும் போட்டியிடுவார்" என்று அறிவித்தார்.

எனினும், திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் நவாஸ் கனி போட்டியிடலாம் என சொல்லப்பட்ட நிலையில், இந்த முறையும் ஏணி சின்னத்தில் போட்டியிடப் போவதாக காதர் மொய்தீன் தெரிவித்தார்.

# புதுக்கோட்டை பழைய பேருந்துநிலையம் அருகே அரிவாளுடன் ஆஞ்சநேயர் கோயில் கருவறைக்குள் நுழைந்த இளைஞரால் பரபரப்பு

புதுக்கோட்டை : மார். 3

புதுக்கோட்டை பழைய பேருந்துநிலையம் அருகே அரிவாளுடன் ஆஞ்சநேயர் கோயில் கருவறைக்குள் நுழைந்த இளைஞரால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை பழைய பேருந்துநிலையம் அருகே ஜெயவீர ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. இந்த கோவில் அப்பகுதியில் பிரசித்தி பெற்றது. இந்நிலையில் நேற்று அந்த கோவிலுக்குள் அரிவாளுடன் இளைஞர் ஒருவர் இருப்பதாக அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.





பின்னர் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் அந்த இளைஞரை வெளியே கொண்டுவர முயன்றபோது அந்த இளைஞர் காவல்துறையை அரிவாளை காட்டி கருவறைக்குள் இருந்தபடியே மிரட்டியுள்ளார். இதனால் அச்சமடைந்த காவல் துறையினர் கருவறைக்குள் உள்ள இளைஞரை மீட்க தீயணைப்பு துறையினரின் உதவியை நாடினர். பின்னர் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து அவர் மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து அவரை வெளியே கொண்டுவர முயற்சித்தனர்.

இருப்பினும் அந்த இளைஞர் வெளியே வர மறுப்பு தெரிவித்தார். குறிப்பாக அந்த இளைஞர் புதுக்கோட்டை நகர பகுதிக்குட்பட்ட அசோக் நகரை சேர்ந்த வினோத் என்பதும் அவர் காதல் விவகாரத்தால் கருவறைக்குள் சென்றதும் அவருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் தெரியவந்தது. இருப்பினும் அவரை சமரசம் செய்து அந்த இளைஞரை வெளியே கொண்டுவர முயற்சித்தனர். ஆனால் அந்த இளைஞர் வெளியே வர முயற்சி செய்பவர்களை உள்ளே செல்பவர்களையும் அவர் கையில் வைத்திருந்த அரிவாளை காட்டி மிரட்டி வந்துள்ளார்.

இதனால் அச்சமடைந்த காவல் துறையினரும், மீட்பு துறையினரும் உடனடியாக அவர் மீது தண்ணீர் பீச்சி அடித்து உள்ளே சென்று பிடிக்க வலையின் உதவியுடன் ஒரு மணி நேர போராட்டத்திற்கு பிறகு அந்த இளைஞரை வெளியே கொண்டுவந்தனர். பின்னர் மனநல மருத்துவர்களையும் வரவழைத்து அவருக்கு ஆலோசனையும் வழங்கி வருகின்றனர். மேலும் சம்பவமறிந்து பொதுமக்கள் ஏராளமானோர் குவிந்ததால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.



புதுக்கோட்டை திலகர் திடல் ஏவிசிசி கல்வி குழுமங்களின் 48-வது ஆண்டு நிறைவுவிழா கலை நிகழ்ச்சியில் சிறப்பாக பரத நாட்டியம் ஆடி முதல் பரிசு பெற்ற விஷ்வதுளசி என்கிற மாணவிக்கு அரசு மன்னர் கல்லூரி முதல்வர் டாக்டர் புவனேஸ்வரி பரிசு வழங்கினார்.

# தலைமறைவான ஜாபர் சாதிக்கின் வங்கிக் கணக்குகள் முடக்கம் : போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிரடி

சென்னை : மார். 3-

போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் தேடப்பட்டு வரும் முன்னாள் திமுக நிர்வாகி ஜாபர் சாதிக்கின் வங்கி கணக்குகள் முடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேற்கு டெல்லியில் உள்ள கைலாஸ் பார்க் பகுதியில் செயல்பட்டு வந்த போதைப்பொருள் கடத்தல் கும்பல் ஒன்று டெல்லி போலீஸ் சிறப்பு பிரிவு மற்றும் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளால் அண்மையில் கைது செய்யப்பட்டது. அதில் சென்னையை சேர்ந்த முகேஷ் (3), முஜிபுர் ரகுமான் (34), விழுப்புரத்தை சேர்ந்த அசோக் (34) ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த கடத்தல் கும்பலுக்கு மூளையாக செயல்பட்டது தமிழ் சினிமா தயாரிப்பாளரும், முன்னாள் தி.மு.க. சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளருமான ஜாபர் சாதிக் என்பது பெரிய வந்தது. இந்த நிலையில் அவர் தலைமறைவானார். இதையடுத்து தி.மு.க.வில் இருந்து ஜாபர் சாதிக் நிரந்தரமாக நீக்கப்பட்டார்.

அந்த வழக்கில் தொடர்புடையதாக மேலும் சிலரை போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் தொடர்ந்து தேடி வருகின்றனர். சென்னை மயிலாப்பூர் சாந்தோம் அருணாச்சலம்சாலையில் உள்ள ஜாபர் சாதிக்கின் இல்லத்தில் 'டெல்லி போதைப்பொருள் தடுப்பு அலுவலகத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும்' என்று நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. மேலும் தலைமறைவாகியுள்ள ஜாபர் சாதிக்கிற்கு லுக்அவுட் நோட்டீஸும் கொடுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லாமல் இருக்க அனைத்து விமான நிலையங்களுக்கும் லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.



இந்நிலையில் ஜாபர் சாதிக் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் நிலம் மற்றும் வங்கி கணக்குகள் தொடர்புடைய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இதையடுத்து ஜாபர் சாதிக் தொடர்புடைய எட்டு வங்கி கணக்குகளை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் முடக்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# பெங்களூரு ஓட்டல் குண்டுவெடிப்பில் சந்தேக நபர் தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் வெளியீடு

பெங்களூரு : மார். 3-

பெங்களூருவில் உள்ள பிரபல ஓட்டலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குண்டுகள் வெடித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூரு ஒயிட்பீல்டு அருகே குந்தலஹள்ளி பகுதியில் பிரபல ராமேஸ்வரம் கபே ஓட்டல் செயல்பட்டு வருகிறது. பெங்களூருவில் பிரபலமான ஓட்டல் என்பதால் எப்போதும் இங்கு மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்.

இதனிடையே, இந்த ஓட்டலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் 1 மணியளவில் 100க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். உணவக ஊழியர்களும் வாடிக்கையாளர்களுக்கு உணவு வினியோகம் செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, ஓட்டலில் பயங்கர சத்தத்துடன் அடுத்தடுத்து 2 குண்டுகள் வெடித்தன.

இந்த குண்டுவெடிப்பில் அதிர்ச்சியடைந்த வாடிக்கையாளர்கள் உணவகத்தில் இருந்து வெளியேறினர். இந்த சம்பவத்தில் ஒருபெண் உள்பட 10 பேர் காயமடைந்தனர். குண்டுவெடிப்பில் ஓட்டலில் சேதம் ஏற்பட்டது. இந்த குண்டுவெடிப்பு குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இந்த சம்பவம் பயங்கரவாத தாக்குதலாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் இது தொடர்பாக தேசிய புலனாய்வு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், தேசிய பாதுகாப்புப்படையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். வெடிகுண்டு நிபுணர்கள், தடயவியல் நிபுணர்களும் சோதனை நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில், பெங்களூரு ஓட்டல் குண்டு வெடிப்பு தொடர்பாக சந்தேக நபர் தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன. சந்தேகிக்கப்படும் நபர் தனது கையில் பையுடன் முகக்கவசம், கண்ணாடி, தொப்பி அணிந்தவாறு மதியம் 12.30 மணியளவில் ஓட்டலுக்கு வந்துள்ளார். அந்த நபர் ஓட்டலில் இட்லி வாங்கிக்கொண்டு அங்கு உள்ள இருக்கையில் அமர்ந்து சாப்பிட்டுள்ளார். பின்னர், ஓட்டலை ஒட்டியுள்ள மரம் அருகே அமைந்துள்ள கை கழுவும் இடத்தில், தான் கொண்டுவந்த பையை வைத்துவிட்டு வெளியேறியுள்ளார்.

அந்த நபர் வெளியேறிய ஒரு மணி நேரத்தில் அடுத்தடுத்து 2 குண்டுகள் வெடித்துள்ளன. கை கழுவும் இடத்தில் வெடிகுண்டுகள் வெடித்துள்ளன. இது தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகள், புகைப்படங்களை கொண்டு சந்தேக நபர் யார் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பையை வைத்து சென்ற சந்தேக நபருடன் மற்றொரு நபர் ஓட்டலில் பேசுவது போன்ற சி.சி.டி.வி. காட்சிகள் கிடைத்த நிலையில் ஓட்டலில் சந்தேக நபரிடம் பேசியவரை போலீசார் கைது செய்துள்ளனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில் ஓட்டலில் பையை வைத்து சென்ற நபர் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பிரதமர் மோடி அறிவித்த மேக் இன் இந்தியா எனப்படும் இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டம் படுதோல்வி : மல்லிகார்ஜுன கார்கே

டெல்லி : மார். 3-

பிரதமர் மோடி அறிவித்த மேக் இன் இந்தியா எனப்படும் இந்தியாவில் தயாரிப்போம் என்ற திட்டம் படுதோல்வி அடைந்துவிட்டதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

தொழில் உற்பத்தித் துறைக்காக பெருமுழக்கத்துடன் மோடி அரசு அறிவித்த திட்டங்கள் முற்றிலும் செயலற்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ள கார்கே, பிரதமர் மோடிக்கு சரமாரி கேள்விகளை அடுக்கி உள்ளனர். இது தொடர்பாக ட்விட்டரில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "10 ஆண்டுகளில் இந்திய ஜிடிபியில் தொழில் உற்பத்தித் துறையின் பங்கு 16%-ல் இருந்து 13% ஆக சரிந்தது என்?. மோடி ஆட்சியில் தொழில் உற்பத்தித் துறையின் சராசரி வளர்ச்சி சரிந்தது ஏன்?. காங்கிரஸ் ஆட்சியில் 7.85% ஆக இருந்த தொழில் உற்பத்தித் துறை சராசரி வளர்ச்சி, மோடி ஆட்சியில் 6% ஆக சரிந்தது ஏன்?. 2022-க்குள் தொழில் உற்பத்தித் துறையில் 10 கோடி புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என மோடி வாக்குறுதி தந்தாரே?.எங்கே அந்த வேலைவாய்ப்புகள்?.




இந்தியாவின் தொழில் உற்பத்தித் துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் கடந்த 10 ஆண்டுகளில் சரிந்தது ஏன்?. பிஎல்ஐ எனப்படும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டங்கள் தோல்வி அடைந்தது ஏன்?. மத்திய அரசின் முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவிடப்படாதது ஏன்?. உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் (பிஎல்ஐ) ஜவுளித் துறைக்கு ஒதுக்கிய நிதியில் 96% செலவிடாதது ஏன்?. புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைக்கு பிஎல்ஐ திட்டத்தின் கீழ் எந்த நிதியும் ஒதுக்கப்படாதது ஏன்?. காங்கிரஸ் ஆட்சியில் 549%- ஆக இருந்த ஏற்றுமதி வளர்ச்சி விகிதம், மோடி ஆட்சியில் 90 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது ஏன்?. பாஜகவின் போலி தேசியவாதத்தால்தானே சீனாவில் இருந்து இந்தியா இறக்குமதி செய்யும் பொருட்களின் மதிப்பு 45% உயர்ந்தது?," என்று பிரதமர் மோடிக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

# தீவிர அரசியலில் இருந்து விலகுவதாக பாஜக எம்.பி.,யும், கிரிக்கெட் வீருமான கவுதம் கம்பீர் அறிவிப்பு

டெல்லி : மார். 3-

தீவிர அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள பாஜக எம்.பி.,யும் கிரிக்கெட் வீருமான கவுதம் கம்பீர், அரசியல் தொடர்பான பணிகளில் இருந்து தன்னை விடுவிக்குமாறு பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டாவிடம் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு டெல்லி தொகுதியின் எம்.பி.யாக உள்ளார் முன்னாள் கிரிக்கெட் வீரர் கவுதம் கம்பீர். இவர், மார்ச் 2019-ல் பாஜகவில் இணைந்தார். அதன்பின் டெல்லியில் பாஜகவின் முக்கிய முகமாக மாறினார். தொடர்ந்து 2019 மக்களவைத் தேர்தலில் கிழக்கு டெல்லி தொகுதியில் 6,95,109 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மக்களவை எம்.பி.யானார்.



வரவிருக்கும் 2024 தேர்தலில் கம்பீருக்கு சீட் வழங்கப்படுவது குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்தன. கடந்த வியாழக்கிழமை 2024 மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்கள் தொடர்பாக மோடி உள்ளிட்ட பாஜக தலைவர்கள் இரவு முழுக்க ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையால் வேட்பாளர்களின் முதல் பட்டியலை பாஜக விரைவில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மத்தியில் தான் அரசியலில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளார் கம்பீர்.

இதுதொடர்பாக எக்ஸ் பக்கத்தில், "வரவிருக்கும் கிரிக்கெட் தொடர்களில் கவனம் செலுத்தும் வகையில், எனது அரசியல் கடமைகளில் இருந்து என்னை விடுவிக்குமாறு ஜே.பி. நட்டாவிடம் கேட்டுக் கொண்டேன். மக்களுக்குச் சேவை செய்ய எனக்கு வாய்ப்பளித்த பிரதமர் நரேந்திர மோடிக்கு மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்கிறேன். ஜெய். ஹிந்த்" என்று தெரிவித்துள்ளார்.

கம்பீர் கடந்த ஆண்டு ஐபிஎல்லில் கொல்கத்தா அணிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அந்தப் பணியில் கவனம் செலுத்துவதற்காக தற்போது அரசியலில் ஓய்வு பெற்றுள்ளதாக சொல்லப்படுகிறது.

# திருச்சி முகாமில் இருக்கும் இலங்கைத் தமிழர்கள் ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், முருகன் ஆகியோரை விடுவிக்க வேண்டும் : எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை : மார். 3-

ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், முருகன் ஆகியோரை திருச்சி முகாமில் இருந்து விடுவிக்க எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

தமிழக சிறையில் 32 ஆண்டுகால நீண்ட சிறைவாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்கள் ராபர்ட் பயஸ், ஜெயகுமார், முருகன், சாந்தன் ஆகியோர் 11.11.2022 அன்று உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இலங்கை குடிமக்கள் என்பதால் அயல் நாட்டுக்கு அனுப்பும் வரை நடமாட்டத்துக்கு கட்டுப்பாடுகள் விதித்து திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த மாதம் சிறப்பு முகாமின் இத்தகைய மனிதத் தன்மையற்ற நிர்வாகத்தின் காரணமாக சாந்தன் அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து, எழுந்து நிற்கக்கூட முடியாமல் பல நாட்கள் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன், கடந்த 28.2.2024 அன்று உடல்நலக் குறைவால் மரணமடைந்துள்ளது, தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அங்கு அவர்கள், சக முகாம்வாசிகள் யாருடனும் பேசவோ பழகவோ, உடற்பயிற்சி, நடைபயிற்சி செய்யவோ அனுமதி மறுக்கப்பட்டு தனிமை அறையில், சிறை போலவே அடைக்கப்பட்டிருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கெனவே 32 ஆண்டுகள் சிறையில் வாழ்க்கையை இழந்தவர்கள், விடுதலைக் காற்றை சுவாசிக்கப் போகிறோம் என்று பெருமூச்சு விடும்பொழுது, மீண்டும் சிறப்பு முகாம் எனும் கொடூரம் அவர்களது வாழ்க்கையில் அரங்கேறும் என்று சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

அதிலும், சிறையில் இருக்கும் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு, மூச்சு முட்ட தனிமைச் சிறையினில் அடைக்கப்படுவோம் என்று நிச்சயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இதனால், கடுமையான மன உளைச்சலுக்கும், உடல் உபாதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு இவர்கள் அனைவரும் தவித்து வந்துள்ளனர். சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டதன் நோக்கமே அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பது தான். முகாமில் அடைக்கப்படுவதற்கு முன்பே கூட, எந்த நாட்டுக்குச் செல்லப்போகிறீர்கள் என்று அவர்களுடைய விருப்பத்தை அரசு அதிகாரிகள் கேட்டபொழுது, அவர்கள் இலங்கை சென்றால் ஆபத்து மற்றும் தங்களுக்கு அங்கு வாழ்வாதாரம் எதுவும் இல்லை என்றும், அதனால் வெளி நாடுகளில் வாழும் தங்களுடைய குடும்பத்தினருடன் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர்.



ஆனால், இந்நாள்வரை அவர்கள் விரும்பும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு எந்தவித முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை. இது தொடர்பாக, விடுதலையானவர்கள் தங்களை இலங்கை துணைத் தூதரகத்துக்கு அழைத்துச் செல்லும்படியும், முகாமில் மறுக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் மாவட்ட ஆட்சியர், UNHCR என தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்தபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்தபாடில்லை என்று தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உதாரணமாக, நடைபயிற்சிக்கு அனுமதி கேட்டு பல மாதங்கள் ஆன நிலையில், இந்த கோரிக்கைக்குக் கூட செவி சாய்க்கவில்லை என்பதில் இருந்தே அவர்கள் எத்தகைய மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். ஏப்ரல் 2010ஆம் ஆண்டு பிரபாகரன் அவர்களுடைய வயதான தாயார் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவ சிகிச்சைக்காக முதலில் சென்னைக்கு வந்தபொழுது, அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து விமானத்தில் இருந்து இறங்கவிடாமல் திருப்பி அனுப்பியது.

அதேபோன்று விடுதலை பெற்ற சாந்தனை காலத்தே வெளிநாடு செல்ல மத்திய அரசுடன் பேசி, உரிய அனுமதி வாங்கித் தராத காரணத்தால், இறுதிக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் வாழ முடியாமல் மரணமடைந்துள்ளதற்கு இந்த அரசே முழு பொறுப்பை ஏற்க வேண்டும். இனியாவது, மீதமுள்ள மூன்று பேரின் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்து, கண் பார்வை குறைபாடு ஏற்பட்டு தவறான சிகிச்சையில் ஒரு கண்ணில் பார்வையை இழந்த ஜெயகுமார் மற்றும் உடல்நலக் குறைவால் அவதியுறும் ராபர்ட் பயஸ் மற்றும் முருகன் ஆகியோரது கடைசி காலத்தில், எஞ்சிய வாழ்நாளை அவர்களுடைய குடும்பத்தினருடன் வசிப்பதற்கு, திருச்சி முகாமில் தனிமைச் சிறையில் இருந்து அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய வெளியுறவுத் துறையையும், முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன்" என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

போந்தவாக்கம் கலைமகள் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற

# அறிவியல் கண்காட்சியை மாவட்ட கல்வி அலுவலர் செந்தில் முருகன் பார்வையிட்டார்





ஊத்துக்கோட்டை, மார் 3-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி அருகே போந்தவாக்கம் ஊராட்சியில் கலைமகள் நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் அறிவியல் கண்காட்சி பள்ளி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,பள்ளியின் தலைமை ஆசிரியர் ஏ.வி. ஜானகிராமன் தலைமை தாங்கினார். பள்ளியின் நிர்வாகி ராகவன்,உதவி திட்ட அலுவலர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக தொடக்க கல்வியின் பொன்னேரி கல்வி மாவட்ட அலுவலர் எஸ்.செந்தில்முருகன் கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

அப்பொழுது மாணவர்கள் இந்திய விண்வெளி சாதனைகள், மாசுபடுதலின் வகைகள், சந்திராயன்-3, கணித மேதைகள்,எண் விளையாட்டு, உடல் உறுப்புகள், மின்சாரம் கையாளும் முறைகள், மறுசுழற்சி முறைகள், புகைப்படங்கள், உணவு கலப்படம்,சாலைபோக்குவரத்து, அணு அமைப்பு, 5 வகை நிலங்கள், வைட்டமின்கள், நீர் மேலாண்மை, பிதாகரஸ் விதிகள், நியூட்டன் வளையம், காற்றுக்கு எடை உண்டு, மூலக்கூறுகளின் அமைப்பு, காடுகள்,காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள்,உணவு சங்கிலி, உணவு வலை உள்ளிட்ட பல்வேறு வகையில் காட்சிப்படுத்தப்பட்டவைகளை மாணவர்கள் சிறப்பாக விளக்கிக் கூறினர்.

இதனை பார்வையிட்ட மாவட்ட கல்வி அலுவலர் செந்தில்முருகன் சிறப்பாக காட்சிப்படுத்தியமாணவர்களை ஊக்கப்படுத்தி பேசினார். இக்கண்காட்சி சிறப்பாக அமைய அயராது உழைத்த ஆசிரியைகளை பாராட்டி பேசினார்.

# அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வூசு சாம்பியன்ஷிப் போட்டி சென்னை மாணவர்கள் பதக்கம் வென்றனர்






சென்னை, மார்,3

அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான வூசு சாம்பியன்ஷிப்போட்டி ஸ்ரீநகர் மாநிலம் ஜம்மு நகரில் ஜம்மு யூனிவர்சிட்டியில் பிப்ரவரி 13 -ம் தேதி முதல் 17-ம் தேதி வரை நடைபெற்றது.

இதில் எஸ் ஆர் எம் அறிவியல்மற்றும்தொழில்நுட்ப கல்லூரி வடபழனி கேம்பஸில் பயிலும் மாணவன் வி. தருண்ராஜ் தாவோலு பிரிவில் கலந்து கொண்டு வெள்ளி பதக்கம் ஒன்றும்,வெண்கல பதக்கம் ஒன்றும் வென்று கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளர்.

இவரின் சாதனையை எஸ் ஆர் எம் ,ஐ எஸ்.டி குழுவினர் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர். மற்றும் சென்னை மாவட்ட வூசு கௌரவ தலைவர்கள் சுரேஷ்குமார் மற்றும் மனேகர பூபதி, சென்னை மாவட்ட வூசு தலைவர் புல்கானி, சென்னை மாவட்ட வூசு செயலாளர் பி. விசாகபதி , சென்னை மாவட்ட வூசு தொழில்நுட்ப இயக்குனர் தண்டபாணி, சென்னை மாவட்ட வூசுதுணை தலைவர் ஆலய குமார், சென்னை மாவட்ட வூசு பொருளாளர் ஜெயச்சந்தரன், புதுகை வரலாறு சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு.காதர் உசேன், நேத்தாஜி சமூக சேவை இயக்கத்தின் தலைவர் டாக்டர் சரத் ராஜ் மற்றும் செயலாளர் .வன்னியராஜன், சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் சரவணன், ஐ சி எப் பழனி, கோடீஸ்வரன், பிரதீப் குமார், ருக்மங்கதன், மணிமாறன், விக்கி, திவாகரன் ஆகியோர் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

ஏரிபேட்டை கிராமத்தில் ரூ.1கோடியே 93 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில்

# அமைக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையை அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்



ஊத்துக்கோட்டை, மார்3-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கீழ்முதலம்பேடு ஊராட்சியை சேர்ந்த ஏரிபேட்டைகிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானிய திட்டம் 2021-2022-ம் ஆண்டு நிதி ரூ.1கோடியே 93 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை,குளியலறை மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டது.

இதனை திறந்து வைக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, கூடுதல் ஆட்சியர் ஓ.என்.சுகபுத்ரா தலைமை தாங்கினார். அனைவரையும் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கி.வே.ஆனந்தகுமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பா.சே. குணசேகரன் ஆகியோர் வரவேற்றனர்.கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன்,மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உமாமகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானிய திட்டத்தில் ரூ.1கோடியே 93 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

மேலும்,இந்த நவீன எரிவாயுதகன மேடையைசுற்று வட்டாரத்தைச் சேர்ந்த 10 ஊர் பொதுமக்கள் பயன்படுத்தி கொள்வார்கள் என்று கூறினார்.இந்நிகழ்ச்சியில், மாவட்ட திட்ட அலுவலர் முருகன்,கும்மிடிப்பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அமிழ்தமன்னன்,சந்திரசேகர், கீழ்முதலம்பேடு ஊராட்சி மன்ற தலைவர் நமச்சிவாயம், மாவட்ட அவைத்தலைவர் பகலவன்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.ஜே.மூர்த்தி,முன்னாள் எம்.எல்.ஏ சி.எச்.சேகர், மாவட்ட பொருளாளர் எஸ். ரமேஷ்,மாவட்ட துணைச் செயலாளர் எம்.எல்.ரவி, மாவட்ட குழு உறுப்பினர் ராமஜெயம்,ஒன்றிய கவுன்சிலர்கள் ஜோதி, இந்திரா திருமலை,தன்னார்வ தொண்டு நிறுவனத்தை சேர்ந்த எ.குமார்,வழக்கறிஞர் தங்கதேவன்,பரசுராமன், ஜெயஸ்ரீ,அமரன்,பூங்குழலி, உதயகுமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர்,கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



அசாம் மாநிலம் கௌஹாத்தியில் நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டியில் பெண்கள் பிரிவில் நமது புதுக்கோட்டையை சார்ந்த உதய் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த லாவண்யா 800 மீட்டர் ஓட்ட போட்டியில் வெள்ளிப் பதக்கமும், 4X400 மீட்டர் ஓட்ட போட்டியில் வெள்ளிப் பதக்கமும் பெற்று புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார், வெற்றி பெற்ற வீரமங்கைக்கு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா கௌரவப்படுத்தி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டபோது.



ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் சென்னை மாநகராட்சி 47வது மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 32 லட்சத்து 50.ஆயிரம் ரூபாய் செலவில் சென்னை கொருக்குப்பேட்டை அம்பேத்கர் நகர் CB ரோடு பகுதியில் 2400 சதுர அடியில் நீத்தார் நினைவு கூடம் கட்டி முடிக்கப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட நீத்தார் நினைவு கூடத்தை ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபிநேசர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். இதனையடுத்து ஏழை எளிய மக்களுக்கு 500 பேருக்கு உணவு பறிமாறினார். நிகழ்ச்சியில் தண்டையார்பேட்டை மாநகராட்சி மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன் பகுதி செயலாளர்கள் ஜெபதாஸ் பாண்டியன், லட்சுமணன் , 47 வது வார்டு கவுன்சிலர் மணிமேகலை, வட்ட செயலாளர் ஏழுமலை, விமலா, பொண் இளவரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



டெல்லியில் நடைபெறும் தொடர் விவசாயிகள் போராட்டத்தின் பொழுது சுட்டு கொல்லப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் தொடர் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதின் தொடர்ச்சியாக காரைக்கால் மாவட்ட அனைத்து விவசாயிகள் சங்கங்களின் சார்பாக படு கொலை செய்ய பட்ட விவசாயிகளுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தியும் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. நிகழ்ச்சியில் புதுச்சேரி முன்னாள் வேளாண்மை துறை அமைச்சர் ஆர். கமலக்கண்ணன் கலந்து கொண்டு கண்டனஉரை ஆற்றினார்கள். மற்றும் தி. மு. க விவசாயஅணி தலைவர் பிரபு, தமீம், காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஆர். பி.சந்திரமோகன். முரளி. வின்செண்ட், சரவணன். நெடுங்காடு ராஜேந்திரன், ஐயப்பன்.ஆனந்த்.. முருகவேலு. மற்றும் எராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நல சங்கத்தலைவர் பொன். ராஜேந்திரன். பொருளாளர் சண்முகநாதன். இணை செயலாளர் சோமு மற்றும் நிர்வாகிகள் செய்து இருந்தனர்




தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி மக்கள் அரசு திட்டங்களை எளிதில் பெறக்கூடிய திட்டம் 71 புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா whatsapp செயலி 8608717171 என்ற நம்பரை அறிமுகப்படுத்தி செய்தியாளர்களை சந்தித்தார். அருகில் திமுக நகர செயலாளர் ஆ.செந்தில் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

தமிழகம் முழுவதும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு

# இன்று போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறும் : அமைச்சர் மா.சுப்பிரமணியன்



சென்னை : மார். 3-

தமிழகம் முழுவதும் இன்று போலியோ சொட்டு மருந்துகள் அளிக்கும் நிகழ்வுகள் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதை போன்று நடத்தப்படவுள்ளது என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, "முதல்வர் ஸ்டாலினின் பிறந்தநாளையொட்டி, பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி நேற்று சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காமராஜர்புரம் பகுதியில் மிகப்பெரிய மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போலோ, காவேரி, ரேலா, ராமச்சந்திரா போன்ற பல்வேறு மருத்துவமனைகளின் சார்பில், 14 மிகப்பெரிய மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. முதல்வர் ஸ்டாலின் நாளை டெல்டா மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.247.50 கோடி செலவில் 700 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்ட நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை தொடங்கி வைக்கவுள்ளார்.

இது நாகப்பட்டிணம், வேளாங்கன்னி மற்றும் அதனை சுற்றியுள்ள மக்களுக்கு பெரிய அளவில் பயனுள்ளதாக இருக்கும். முதல்வர் முன்னிலையில் நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி 12.01.2022 அன்று பிரதமரால் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்றுவந்த மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று 700 படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனையாக நாளை முதல்வரால் திறந்து வைக்கப்படவுள்ளது. மேலும், மயிலாடுதுறை, திருவாரூர் போன்ற பல்வேறு மாவட்டங்களில் புதியதாக கட்டப்பட்டுள்ள ரூ.17 கோடி செலவிலான மருத்துவ கட்டிடங்களை திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழகம் முழுவதும் இன்று போலியோ சொட்டு மருந்துகள் அளிக்கும் நிகழ்வுகள் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதை போன்று நடத்தப்படவுள்ளது. போலியோ என்ற இளம்பிள்ளை வாத நோய்க்கு உலகம் தோறும் முற்றுப்புள்ளி வைக்கப்படுவதை போன்று தமிழ்நாட்டில் போலியோ நோய் இல்லாத தமிழ்நாடு என்ற இலக்கு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்று UNICEF நிறுவனம், பன்னாட்டு ரோட்டரி சங்கங்கள் இணைந்து போலியோ சொட்டு மருந்து தரும் நிகழ்வு நடைபெறுகிறது.

5 வயதிற்குட்பட்ட 57,84,000 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 43,051 மையங்களில் போலியோ சொட்டு மருந்து அளிக்கும் முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இதற்காக அரசு மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் சார்பில் 2 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பொதுமக்கள் இந்த முகாம்களை பயன்படுத்தி 100 % தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகள் செலுத்துவதை உறுதிபடுத்த வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்ட சிறப்பு முகாம்



காட்டுமன்னார்கோவில், மார் 03

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி சார்பில் உதவி பெறும் கலைமகள் தொடக்கப் பள்ளி வளாகத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் பயனாளிகள் பதிவு செய்யும் சிறப்பு முகாம் நடைபெற்றது காட்டுமன்னார்கோயில் வட்டாட்சியர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்

காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி மன்ற தலைவர் கணேசமூர்த்தி தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார் மாவட்ட திட்ட அலுவலர் இளங்கோவன் வாழ்த்துரை வழங்கி முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் மிகாமல் உள்ள குடும்பத்தினருக்கு காப்பீடு அட்டை வழங்கப்படுகிறது தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவமனை 600, மற்றும் தனியார் மருத்துவமனை 860, மொத்தம் 1460 மருத்துவமனைகளில் ரூ.5 லட்சம் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1.45 கோடி குடும்பத்தினர் பயன்பெற்று வருகின்றனர்.

நிகழ்ச்சியில் கல்வி குழு உறுப்பினர் முத்துசாமி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் நிஜார் அஹமது ஜெய பாண்டியன் பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜேஸ்வரி மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் நிகழ்ச்சியில் கல்வி குழு உறுப்பினர்கள் கருணாநிதி பாலமணிகண்டன் மணவாளன் பூக்கடை செந்தில் ஆய்வாளர் துரைராஜ் வருவாய் ஆய்வாளர் தென்னரசு பேரூராட்சி உறுப்பினர்கள் மருத்துவத்துறைபணியாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் காட்டுமன்னார்கோயில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு மருத்துவ காப்பீடு திட்டம் பதிவு செய்து பயன்பெற்றனர். முடிவில் பேரூராட்சி செயல் அலுவலர் தங்க வேல் நன்றி தெரிவித்தார்.

# சீத்தஞ்சேரி கிராமத்தில் பூண்டி வடக்கு ஒன்றிய திமுக அலுவலகம் திறப்பு விழா





ஊத்துக்கோட்டை, மார்3-

திருவள்ளூர் மாவட்டம், பூண்டி வடக்கு ஒன்றிய திமுக அலுவலகம் சீத்தஞ்சேரி கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது.இதன் பின்னர்,நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி,இல்லம் தேடி ஸ்டாலின் குரல் என்னும் முன்னெடுப்பில் துண்டு பிரசுரங்களை வழங்கி திமுக அரசின் சாதனைகளை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளுவது உள்ளிட்டவை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு,பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான் பொன்னுசாமி தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ. மூர்த்தி , பொதுக்குழு உறுப்பினர் ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் டி.கே. சந்திரசேகர் , கிறிஸ்டி , ஆ.சத்தியவேலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் கே.வி. லோகேஷ்,மோதிலால், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணைஅமைப்பாளர்கள் வக்கில் வெஸ்லி, ரமேஷ், ரவிக்குமார், கஜேந்திரன் , சங்கர், ஏனம்பாக்கம் சம்பத், பேரூர் செயலாளர் அபிராமி, மாவட்ட பிரதிநிதிகள் சீனிவாசலு, நாகராஜ், ரகு , அவைத்தலைவர் ராகவன், ஸ்ரீதேவி, வேல்முருகன், குருமூர்த்தி, நாகபூஷணம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், கும்மிடிபூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திமுக அலுவலகத்தை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில்,மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் நம்பாக்கம் வேணு,நளாயிணி, விஜயமாலா, வாசு ,யுவராஜ், பிரபாகரன், பூபாலன்,சித்ராபாபு, பரந்தாமன், பாபு மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர்,கிளைக்கழகநிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் ஞாயிற்றுக்கிழமை (இன்று) நடைபெறும் இந்தியன் சூப்பர் லீக் (ஐஎஸ்எல்) 2023-24 போட்டியில் ஒடிஷா எஃப்சி, சென்னையின் எஃப்சி அணி கடுமையான சவாலை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பத்திரிக்கை யாளர் நேற்று சந்திப்பில் சென்னையின் எஃப்சி அணி தலைமைப் பயிற்சியாளர் ஓவன் கோய்ல், , ஹோம் கிரவுண்டில் ரசிகர்களின் முகத்தில் மீண்டும் புன்னகையை வரவழைக்கவும் தனது தரப்புக்கு திறன் இருப்பதாகவும்.கண்டிப்பாக வெற்றி பெற்று டேபில் வரிசையில் முன்னுக்கு செல்வோம் என்றார் மேலும் கூறுகையில் அனுபவம் வாய்ந்த ஒடிசாவை மிகவும் நல்ல அணி என்று குறிப்பிட்டார் மற்றும் வெற்றியைப் பெறுவதற்காக தனது அணி முழு திறனுடன் விளையாடுமாறு கேட்டுக் கொண்டார்.

# உத்தரப் பிரதேச மாநிலத்தில் தலித் மாணவரை சுட்டுக்கொன்ற அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி,மார்ச்.3-

தென்காசி மாவட்டம்- தென்காசிபுதிய பேருந்து நிலையம் முன்பாக எம் பி ரஞ்சன்குமார் உத்தரவின் பேரில்இந்திய தேசிய காங்கிரஸ் எஸ்சி துறை சார்பாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் பட்டியல் இனத்தைச் சேர்ந்த 10-ம் வகுப்பு படித்த சுமேஷ்(17) என்ற சிறுவனை துப்பாகியால் சுட்டு படுகொலை செய்த காவல்துறையை கண்டித்தும், உத்தரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அரசை கண்டித்தும், தமிழ்நாடு மீனவர் சமூக மக்கள் இலங்கை அரசிடம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் அவல நிலையை கண்டித்தும், பாசிச விரோத போக்கை கடைபிடிக்கும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை கையாளும் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசையும் பாரதிய ஜனதா கட்சியையும் கண்டித்து தென்காசியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமை மாவட்ட எஸ்சி துறை தலைவர் ராமச்சந்திரன், முன்னிலை மாவட்ட துணை தலைவர் சிவராமகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர் எஸ். ஆர். சுப்பிரமணியம், செங்கோட்டை நகரத் தலைவர் ராமர், வழக்கறிஞர் அணித் தலைவர் காசி பாண்டியன், வரவேற்புரை புஷ்பராஜ் திலகம், மற்றும் எம்.பி. சுப்பிரமணியம், ஆய்க்குடி பெரியசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் தாயார் தோப்பு ராமர், வட்டாரத் தலைவர் முருகையா, ஜெகநாதன், ரூபன், குமார் பாண்டியன் ,கீழப்பாவூர் பேரூராட்சி துணைத் தலைவர் ராஜசேகர், கீழப்பாவூர் நகரத் தலைவர்சிங்கக்குட்டி என்ற குமரேசன்,, கவுன்சிலர்கள் கோடீஸ்வரன் , தாமோதரன், செங்கோட்டை பூபதி,மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவர் சேர்மக்கனி, மகளிர் அணி நிர்வாகிகள் தங்கம்மா,புஸ்பவல்லி, புஷ்பா, பாரிஷா, நாகூர் மீராள், மனோரமா,ஆகியோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னையில் முதல்வரை சந்தித்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வாழ்த்து தெரிவித்தார், அருகில் அமைச்சர்கள் ,தலைமை திமுக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளனர்.

# திருமானூர் ஜல்லிக்கட்டு போட்டியில் 24 பேர் காயம்

அரியலூர், மார் .3-

திருமானூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 24 பேர் காயமடைத்தனர்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் விநாயகர் கோயில் அருகே, மாசிமகம் திருவிழாவையொட்டி நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகளை, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா கொடியசைத்து தொடங்கி வைத்தார், அரியலூர் ஆர்டிஓ ராமகிருஷ்ணன், தாசில்தார் ஆனந்த வேல் ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்ற, இந்த ஜல்லிக்கட்டு போட்டிகளை, திருமானூர் ஊராட்சி மன்றத் தலைவர் உத்திராபதி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கீதா ஜெயவேல், முருகானந்தம், சீமான் மூப்பனார், வக்கீல் முத்துக்குமரன்,



திருவேங்கடம் உள்ளிட்டோர், முன் நின்று நடத்தினர்.

450 காளைகள் பங்கேற்ற திருமானூர் ஜல்லிக்கட்டு போட்டியில் அவற்றை அடக்கும் பணியில், 194 ஜல்லிக்கட்டு வீரர்கள் ஈடுபட்டனர். ஜல்லிக்கட்டு போட்டியில் காளைகளை அடக்கிய வீரர்கள் மற்றும் அவர்களுக்கு கட்டுப்படாமல் ஓடிய காளைகளின் உரிமையாளர்கள் ஆகியோருக்கு பல்வேறு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

திருமானூர் ஜல்லிக்கட்டு போட்டியின் போது, 24 பேருக்கு காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு அங்கிருந்த மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். மேலும் படுகாயம் அடைந்த, அரியலூர் மாவட்டம் கோவிலூரை சேர்ந்த தமிழரசன் (31), சுள்ளங்குடி கிராமத்தைச் சேர்ந்த தர்மராஜ் (61), ஆகிய இருவரும், தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், ஜெயங்கொண்டம் அருகே வடுவூர் கிராமத்தைச் சேர்ந்த தேவா (17), அரண்மனை குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த ரஞ்சித் (19), ஆகிய இருவரும், அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர், அரியலூர் மாவட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

# கடையநல்லூர் அருகே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மாணவர்கள் போதை ஒழிப்பு பேரணி

தென்காசி,மார்ச்.3-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட சிங்கிலிபட்டி கிராமத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை தென்காசி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி. ஆர். கிருஷ்ணராஜா, தலைமையில் தொடங்கி வைத்து இளைஞர்கள், குழந்தைகளுக்கு செல்போன் உபயோகிப்பதினால் ஏற்படும் நன்மை, தீமைகள் குறித்தும், போதை பொருள்களால் இளைய தலைமுறைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் மாணவர்களுக்கு விளக்க உரையாற்றினார்.




நிகழ்ச்சியில் இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர் சுப்பிரமணியன், எம்.முத்து செல்வம்நகர இளைஞரணி அமைப்பாளர் சிங்கிலி பட்டி, ஒன்றிய கவுன்சிலர் ஆ. மணிகண்டன், ஸ்ரீதர் தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர், ராஜ்குமார், முரளி சிவராஜ் மைதீன் ஒலி, திலகவதி கண்ணன் ஊராட்சி மன்றத் தலைவர் புன்னையாபுரம், துணைத் தலைவர் திருமலை வேலு, ஒன்றிய பிரதிநிதி தங்கப்பாண்டி, கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் பா. விக்டோரியா தங்கம், திட்ட அலுவலர் கு.ஆறுமுகம், பேராசிரியர் மருதமுத்து செந்தூர்பாண்டியன், மற்றும் கடையநல்லூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், தொண்டர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு நாட்டு நல்ல பணித்திட்ட முகம், கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# அரியலூரில் எம்.ஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆண்டு விழா




அரியலூர்,மார்ச்.3-

எம்ஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆண்டு விழா நடைபெற்றது.

இது பற்றி கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பில், அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள தத்தனூர் மீனாட்சி இராமசாமி பாலிடெக்னிக் கல்லூரியில் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு கல்வி நிறுவனங்களின் தாளாளர் மற்றும் செயலாளர் எம். ஆர். இரகுநாதன் தலைமை வகித்தார், சிறப்பு விருந்தினராக ஜெயங்கொண்டம் போக்குவரத்து ஆய்வாளர் சு.மதிவாணன் கலந்து கொண்டார், கல்வி நிறுவனங்களின் இயக்குனர் இராஜமாணிக்கம், தியாகராஜன் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் விழாவில் கல்லூரியின் முதல்வர் சிவசங்கர் வரவேற்புரை ஆற்றினார்.

அதனை தொடர்ந்து கல்லூரியில் நடத்தப்பட்ட பல்வேறு இலக்கிய மன்ற போட்டிகள் மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வென்ற 116 மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசினை சிறப்பு விருந்தினர் மற்றும் கல்வி நிறுவனங்களின் தாளாளர் வழங்கினார்கள்.

இறுதியாக கல்லூரியின் துணை முதல்வர் கொளஞ்சிநாதன் நன்றியுரை கூறினார், விழாவினை தமிழ் துறை பேராசிரியை சிவரஞ்சனி தொகுத்து வழங்கினார், இதற்கான ஏற்பாடுகளை உடற்கல்வி இயக்குனர் சசிகுமார், மெக்கானிக்கல் துறை இளவரசன் தலைமையில் கல்லூரியின் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

# "திமுக கூட்டணி கேட்ட தொகுதி கிடைக்கும் என நம்புகிறோம்" - வேல்முருகன்

சென்னை : மார். 3-

"மக்களவைத் தேர்தலில் ஒரு தொகுதி கேட்டுள்ளோம். கேட்டுள்ள தொகுதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது" என்று திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

திமுக உடனான முதல் கட்ட தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக்கு பிறகு தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "2024 மக்களவைத் தேர்தலில் தமிழக வாழ்வுரிமை கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்க வேண்டும் என்று திமுகவிடம் கோரிக்கை வைத்துள்ளோம். அதற்கான நியாயமான காரணங்களையும் எடுத்துவைத்துள்ளோம். கடந்த மக்களவைத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் ஆகியவற்றியில் திமுக கூட்டணியின் வெற்றிக்கு நானும்



பங்காற்றியுள்ளேன். சட்டமன்றத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் குரல் ஒலிப்பது போல் நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும் என்று எனது விருப்பத்தை தெரிவித்தேன். எனது கோரிக்கையை முதல்வர் ஸ்டாலினிடம் கொண்டு செல்லவதாக திமுக தெரிவித்துள்ளது.

இந்த மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று பேச்சுவார்த்தையில் வலியுறுத்தினேன். நாங்கள் கேட்டிருக்கும் ஒரு தொகுதியை திமுக கொடுக்கும் என நம்புகிறோம். தமிழகத்தில் எங்கு போட்டியிட சொன்னாலும் தயாராக உள்ளோம்" என்று தெரிவித்தார்.

# திருவரங்குளம் கைக்குறிச்சி மகளிர் கல்லூரியில் நுண்ணுயிரியல், உயிர் தொழில்நுட்பவியல் சார்பில் தேசிய கருத்தரங்கம்

திருவரங்குளம்- மார்ச். 3-

கைக்குறிச்சி ஸ்ரீபாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் நுண்ணுயிரியல், உயிர் தொழில்நுட்பவியல் சார்பில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கம் சனிக்கிழமை நிறைவு பெற்றது. இவ்விழாவிற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர் குரு.தனசேகரன் தலைமை தாங்கினார். இயக்குநர் மா.குமுதா, முதல்வர் செ.கவிதா ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர்.



விழாவில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கடல் சார் அறிவியல் துறையின் ஆய்வாளர் கே.நந்தினி தேவி, கேரளா காசர்கோடு செயின் சேவியர் கல்லூரியின் உதவிப் பேராசியர் பி.சினோஷ் சகாரியச்சான், காரைக்குடி அழகப்பா பல்கலைகழகத்தின் உதவிப் பேராசிரியர் டி.கவிதா, தஞ்சாவூர் பூண்டி ஏ.வி.வி.எம். ஸ்ரீபுஷ்பம் கல்லூரியி;ன் இணைப் பேராசிரியர் ஏ.பன்னீர் செல்வம் ஆகியோர்கள் ஒவ்வொரு தலைப்புகளிலும் கருத்துரை வழங்கினார்;.

ஆய்வுக் கட்டுரைகள் சமர்பித்தலில் பி.ஐஸ்வர்யா, எம். அலமேலு, வி.தீபிகா, சுவரொட்டிப் போட்டியில் பி.வர்ஷா, பி.ஐஸ்வர்யா, என்.சைனி ரமிதா ஆகிய மாணவிகள் வெற்றிப் பெற்று பரிசும், சான்றிதழ்கள் பெற்றனர்.

இக்கருத்தரங்கில் சிவகங்கை, திருச்சி, கடலூர், திருவாரூர், இராமநாதபுரம் ஆகிய பல்வேறு மாவட்ட கல்லூரிகளில் இருந்து 300-க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்று ஆய்வுக் கட்டுரை, சுவரொட்டிகளை சமர்ப்பித்தனர். அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முன்னதாக உதவிப்பேராசிரியர் ஆர். லாவண்யா வரவேற்றார், முடிவில் நுண்ணுயிரியல் துறைத் தலைவர் எம்.கீதா நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் 1975- 78 ஆம் ஆண்டுகளில் வேதியியல் பட்டம் பயின்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

புதுக்கோட்டை, மார்ச்.3-

புதுக்கோட்டையில் மாமன்னர் கல்லூரியில் 1975 -78 ஆம் ஆண்டுகளில் வேதியியல் பட்டம் பயின்ற முன்னாள் மாணவர்கள் மீள் கூடுகை நிகழ்வு நேற்று மாமன்னர் கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் புவனேஸ்வரி தலைமை தாங்கினார், முன்னாள் மாணவர் முத்துவேல் வரவேற்றார் முதல்வர் புவனேஸ்வரி, வேதியல் துறைத் தலைவர் பழனிச்சாமி, பேராசிரியர் பகுத்தறிவாளன் , கணேசன் முன்னாள் பேராசிரியர்கள் அண்ணாமலை, ஹரிராம் ஜோதி நவநீதன் ,வெங்கடேசன் ,ராஜன் ,சண்முகம், சக்திமோகன், திருநாவுக்கரசு ,உள்ளிட்ட



பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னாள் மாணவர்களுடன் கலந்துரையாடி வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்வில் முன்னாள் மாணவர்கள் தங்களைப் பற்றி அறிமுகம் செய்து கொண்டனர், முன்னாள் மாணவர்கள் சார்பாக தற்போது வேதியியல் துறையில் பயிலும் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் கணேஷ் என்ற மாணவனுக்கு மருத்துவ உதவியாக ரூபாய் 30,000 ம் நிதியாக பெற்றோரிடம் கல்லூரி முதல்வர் புவனேஸ்வரி வழங்கினார்.

நிறைவாக நாகமுத்து நன்றி கூறினார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை முன்னாள் மாணவர் அசோகன் ஒருங்கிணைத்தார், பின்னர் முன்னாள் மாணவர்கள் வேதியல் துறை வகுப்பறைக்கு சென்று தங்கள் பேராசிரியர்களுடன் அமர்ந்து மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினார்கள், அனைவருக்கும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.



மாமன்னர் மருது பாண்டியர்களுக்கு சிவகங்கை மண்ணில் சிலை நிறுவக்கோரி தமிழக வாழ்வுரிமை கட்சி முன்னெடுக்கும் கையழுத்து இயக்கத்தில் அதிமுக பொதுச்செயலாளரும்,முன்னாள் முதலைமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி தனது கையெழுத்தை பதிவு செய்தார். தமிழக வாழ்வுரிமைக் கட்சி தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் புலேந்திரன் கா.முருகானந்தம் ஒருங்கிணைப்பில் மாநில துணை பொதுச்செயலாளர் சத்ரியன் வேணுகோபால் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட செயலாளர் நியாஸ், சேலம் மாவட்ட மாணவரணி செயலாளர் கரும்புலி கவியரசன், சேலம் ஹரி விக்னேஷ் உள்ளிட்டோர் உள்ளனர்.

# 'மாரடைப்பு பாதிப்புகளுக்கு கோவிட் தடுப்பூசி காரணமல்ல' ஐசிஎம்ஆர் ஆய்வை குறிப்பிடும் மத்திய அரசு

புதுடெல்லி : மார். 3,

மாரடைப்பு பாதிப்புகளுக்கு கோவிட்-19 தடுப்பூசி காரணமல்ல என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) மேற்கொண்ட விரிவான ஆய்வில் தெரிய வந்திருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இந்திய சுகாதாரம் தொடர்பாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் நடத்திய கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய மன்சுக் மாண்டவியா, "உலகில் சுமார் 150 நாடுகளுக்கு கோவிட்-19 தடுப்பூசிகளை இந்தியா வழங்கியது. இது அந்த நாடுகளில் மகத்தான நன்மதிப்பை உருவாக்கியுள்ளது.

கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றி தவறான எண்ணங்களை உருவாக்க முயற்சிகள் நடந்தன. யாருக்காவது பக்கவாதம் ஏற்பட்டால், அதற்குக் காரணம் கோவிட் தடுப்பூசி என்று சிலர் நினைக்கிறார்கள். ஐசிஎம்ஆர் இதைப் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளது. நாடு முழுவதும் உள்ள 47 மூன்றாம் நிலை மருத்துவமனைகளின் பங்கேற்பின் மூலம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. 18-45 வயதிற்குட்பட்ட ஆரோக்கியமான நபர்கள், எந்த ஒரு அறியப்பட்ட நோய்த்தொற்றும் இல்லாமல், அக்டோபர் 2021-மார்ச் 2023 க்கு இடையில் திடீரென விவரிக்கப்படாத காரணங்களால் இறந்தவர்கள் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.



புகைப்பழக்கம், மதுப்பழக்கம், போதைப்பொருள் பயன்பாடு, உடல்ரீதியாக தீவிரமாக செயல்படுவது போன்ற வாழ்க்கை முறை காரணிகள், விவரிக்க முடியாத திடீர் மரணத்துடன் தொடர்புடையவை. எனவே, இந்த ஆய்வுக்காக, கோவிட்-19 தடுப்பூசி, தொற்று மற்றும் கோவிட்-19க்கு பிந்தைய நிலைகள், குடும்ப வரலாறு, புகைபிடித்தல், போதைப்பொருள் பயன்பாடு, மது அருந்துதல், இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பான தீவிர உடல் செயல்பாடுகள் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டன. அந்த ஆய்வில், கோவிட் தடுப்பூசி, மாரடைப்பு பாதிப்புகளுக்கு காரணமல்ல என்பது கண்டறியப்பட்டது.

வாழ்க்கை முறை, புகையிலை பயன்பாடு, அதிகப்படியாக மது அருந்துவது போன்றவை மாரடைப்புக்கு காரணங்களாக இருக்கின்றன. சில சமயங்களில் தவறான தகவல்கள் மக்களிடையே தவறான கருத்தை உருவாக்கிவிடும். நாம் எடுக்கும் எந்தவொரு முடிவும் தரவுகளின் அடிப்படையிலும், அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையிலும் இருக்க வேண்டும்.

நிபுணர்களின் ஆலோசனை மற்றும் அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் தடுப்பூசி போடுவது தொடர்பான முடிவுகளை அரசாங்கம் எடுத்தது. தடுப்பூசி போடப்பட்டபோது, இந்த தடுப்பூசி நல்லதல்ல என்று தவறான கருத்தை உருவாக்க முயற்சி செய்யப்பட்டது. தடுப்பூசி நன்றாக இருந்தால், பிரதமர் மோடி ஏன் அதை எடுத்துக்கொள்ளவில்லை என்று அரசியல் கேள்விகள் எழுப்பப்பட்டன. வயது காரணமாகவும், நோய்த்தொற்று இல்லாததன் காரணமாகவும், மூன்றாவது பிரிவில் அவர் தடுப்பூசியை எடுத்துக்கொண்டார்.

கோவிட் சமயத்தில் அதிகாரம்பெற்ற குழுக்கள் உருவாக்கப்பட்டன. அந்த குழுக்கள் முடிவுகளை எடுத்தன. நான் ஒப்புதல் அளித்தேன். ஆனால் முடிவு அவர்களுடையது, என்னுடையது அல்ல. நாடாளுமன்றத்தில் அரசு தாக்கல் செய்த பொருளாதார ஆய்வு 2022-23 இன்படி, ஜனவரி 6, 2023 நிலவரப்படி, நாடு முழுவதும் 220 கோடிக்கும் அதிகமான கோவிட் தடுப்பூசிகளை இந்தியா வழங்கியுள்ளது" என்று தெரிவித்தார்.

# குஜராத்தின் 'ஒற்றுமை சிலை' ஒரு பொறியியல் அதிசயம் - நேரில் பார்வையிட்ட பில் கேட்ஸ் பாராட்டு

காந்திநகர் : மார். 3-

குஜராத்தில் அமைக்கப்பட்டுள்ள சர்தார் வல்லபாய் படேலின் ஒற்றுமை சிலை, ஒரு பொறியியல் அதிசயம் என்று மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் பில் கேட்ஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் பில் கேட்ஸ், பிரதமர் மோடி கேட்டுக்கொண்டதற்கு இணங்க குஜராத்தின் நர்மதா மாவட்டத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேலின் ஒற்றுமை சிலையைப் பார்வையிட்டார்.

இதனையடுத்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஈர்க்கக்கூடிய ஒற்றுமை சிலையைப் பார்வையிட அழைத்ததற்காக பிரதமர் மோடிக்கு நன்றி. இது ஒரு பொறியியல் அதிசயம். அதோடு, சர்தார் பட்டேலுக்கு ஒரு பெரிய அஞ்சலி. இது உள்ளூர் பழங்குடி சமூகங்களுக்கு,



குறிப்பாக பெண்களுக்கு பொருளாதார வாய்ப்பை உருவாக்குவதைப் பார்ப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்துள்ளார். மேலும், அந்த பதிவில், ஒற்றுமை சிலை முன்பாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அவர் பகிர்ந்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடியை கடந்த வியாழக்கிழமை சந்தித்த பில் கேட்ஸ், செயற்கை நுண்ணறிவு தொடர்பாக பேசினார். இதையடுத்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நரேந்திர மோடியை சந்திப்பது எப்போதும் ஊக்கமளிக்கக்கூடியது. அவருடன் விவாதிக்க நிறைய இருக்கிறது. இந்த சந்திப்பின்போது, பொது நலனுக்காக செயற்கை நுண்ணறிவு குறித்துப் பேசினோம். பெண்கள் தலைமையிலான வளர்ச்சி; விவசாயம், சுகாதாரம் மற்றும் காலநிலை தழுவலில் புதுமை, இந்தியாவிலிருந்து உலகம் எடுத்துக்கொள்ள வேண்டிய பாடம் ஆகியவை குறித்தும் பேசினோம்" என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசினார்.

குஜராத்தின் ஜாம்நகரில் நடைபெற்ற ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்ச்சென்ட் திருமண வரவேற்பு நிகழ்ச்சியிலும் பில் கேட்ஸ் கலந்து கொண்டார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# புரோ கபடியில் புனே அணி சாம்பியன் போராடி வீழ்ந்தது ஹரியானா



ஐதராபாத் : மார். 3,

**புரோ கபடி லீக் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த இறுதிப்போட்டியில் ஹரியாணாவை வீழ்த்தி முதன் முறையாக கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது புனே அணி.**

புரோ கபடி லீக் தொடரின் 10 வது சீசன் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக நடந்து வந்தது. மொத்தம் 12 அணிகள் மோதின. அவற்றுள் புனே அணியும், ஹரியாணா அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இத்தொடரில் கடைசியாக பங்கேற்ற 11 போட்டியிலும் வெற்றி பெற்று அதிக தன்னம்பிக்கையுடன் புனே வீரர்கள் களமிறங்கினர்.

போட்டியின் முதல் புள்ளியை புனே அணியே பெற்றது. அடுத்த புள்ளியை ஹரியாணா அணி பெற்றது. ஆனாலும் போட்டியின் முதல் 10 நிமிடத்தில் புனே அணி 4-3 என முந்தியது. அடுத்த சில நிமிடங்களில், இரு தரப்பிலும் ரெய்டு சென்ற வீரர்கள் பிடிபட, விறுவிறுப்பு அதிகரித்தது. போட்டியின் 17 வது நிமிடத்தில் ரெய்டு சென்ற புனே வீரர் பங்கஜ், 4 பேரை அவுட்டாக்கியதால், அது 'சூப்பர் ரெய்டாக' அமைந்தது. முதல் பாதி முடிவில் புனே அணி 13-10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி துவங்கியதும் ஹரியாணா அணி, முதன் முறையாக ஆல் அவுட்டாக, புனே (21-15) பக்கம் வெற்றி திரும்பியது. கடைசி 5 நிமிடம் இருந்தபோது, ஹரியாணா அணி 17 புள்ளிகளை பெற்றிருந்ததால் 25 புள்ளிகளை பெற்றிருந்த புனேயை நெருங்கப் போராடியது. கடைசி 1 நிமிடம் இருந்த போது, ஹரியாணாவின் சித்தார்த் 2 புள்ளி எடுத்த போதும்கூட அது அவர்களின் வெற்றிக்குப் போதவில்லை.

ஆட்டத்தின் முடிவில் புனே அணி 28-25 என்ற கணக்கில் 'திரில்' வெற்றி பெற்றது. புரோ கபடி அரங்கில் முதன் முறையாக சாம்பியனாது. கோப்பை வென்ற புனே அணிக்கு ரூ. 3 கோடி பரிசு தரப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த ஹரியாணாவுக்கு ரூ. 1.8 கோடி கிடைத்தது. இந்த போட்டியில் தமிழ்நாட்டின் தமிழ் தலைவாஸ் அணிக்கு 9 வது இடம்தான் கிடைத்தது. அந்த அணி 22 போட்டிகளில் விளையாடி 9 வெற்றியும், 13 தோல்வியும் பெற்று, 51 புள்ளிகளுடன் பாதியிலேயே வெளியேறியது.

# விராட் கோலி விளையாடாதது ஏமாற்றமளிக்கிறது இங்கிலாந்து வீரர் ஆண்டர்சன் வருத்தம்



தரம்சலா : மார். 3,

**இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் விராட் கோலி தனிப்பட்ட காரணங்களுக்காக ஆடாத நிலையில், "கோலி விளையாடாதது ஏமாற்றம் அளிக்கிறது" என்று இங்கிலாந்து அணி வீரர் ஆண்டர்சன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது. 5 டெஸ்ட் போட்டிகளில் இதுவரையில் 4 டெஸ்ட் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இதில் 3-1 என்ற கணக்கில் இந்தியா முன்னிலைப் பெற்றுள்ளது. இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரும் மார்ச்.7 ம் தேதி தொடங்க உள்ளது. அதற்கான பயிற்சியில் இருநாட்டு வீரர்களும் மும்மரமாக உள்ளனர். முன்னதாக, இந்த டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில், நம்பிக்கை நட்சத்திரம் விராட் கோலி இடம் பெற்றிருந்தார்.

முதல் டெஸ்ட் போட்டி துவங்க மூன்று நாட்கள் இருந்த நிலையில் தனிப்பட்ட காரணத்தால் தான் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்தார். அவரது முடிவை மதித்து பிசிசிஐ மற்றும் இந்திய அணி நிர்வாகம் அவரை விடுவித்தது. அப்போது விராட் கோலி இல்லாதது மிகப்பெரிய பின்னடைவாக பார்க்கப்பட்டது. ஆனால் இளம் வீரர்களின் அபாரமான ஆட்டத்தால் இந்தியா, இந்தத் தொடரை வென்றுள்ளது.

எனினும் அவ்வப்போது கோலி குறித்து இளம் வீரர்களும், இங்கிலாந்து அணி வீரர்களும் நினைவுக்கூறி வருகின்றனர். இந்நிலையில், இங்கிலாந்து அணியின் வீரர் ஜேம்ஸ் ஆண்டர்சன், விராட் கோலி குறித்து பகிர்ந்துக் கொண்ட விஷயம் வைரலாகி வருகிறது.

"இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் கோலி விளையாடாதது இங்கிலாந்து வீரர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால், எங்களுக்கு எதிராக அவர் விளையாடாதது ஏமாற்றமாகவே உள்ளது. அவருக்கு எதிராக பந்து வீசுவது மிகவும் கடினமான ஒன்று. அவர் ஒரு சிறந்த வீரர்" என்று விராட் கோலியை ஆண்டர்சன் புகழ்ந்துள்ளார். இந்திய வீரர்களிடம் மட்டுமின்றி அனைத்து நாடுகளின் வீரர்களுடன் விராட் கோலி நட்பில் உள்ளதே இதற்கு காரணம் என்று கிரிக்கெட் ரசிகர்கள் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

கடந்த பிப்.15 ஆம் தேதி விராட் கோலி- அனுஷ்கா சர்மா தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்தது. இந்த காரணத்தால் குடும்பத்துடன் நேரத்தை செலவிட வேண்டும் என்பதற்காகவே, விராட் கோலி, இந்தியா - இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் இருந்து விலகியது குறிப்பிடத்தக்கது.

வரலாறு சினிமா

# 'அதோமுகம்' – திரைவிமர்சனம்




சென்னை : மார். 3,

**கதையின் நாயகன் மார்ட்டின் (எஸ். பி.சித்தார்த்), மிகப்பெரிய எஸ்டேட்டில் மேனேஜராக பணியாற்றுகிறார். தனது மனைவி லீனாவை (சைதன்யா பிரதாப்) இம்ப்ரஸ் செய்ய, விதவிதமான ஐடியாக்களை மேற்கொள்கிறார். மனைவியின் செல்போன் கேமரா வழியாக அவரது நடத்தைகளை கவனிக்கும் ஆப் மூலம் அனைத்தையும் கவனித்து, அதை ஒரு வீடியோவாக்கி இம்ப்ரஸ் செய்ய முயற்சிக்கிறார். சாதாரண இந்த விளையாட்டு விபரீதமாகிறது.**

தான் இல்லாத நேரத்தில் ஒரு ஆண் தன் வீட்டுக்கு வருவதையும், மனைவி அவனுடன் இணைந்து தன்னை கொலை செய்ய திட்டமிடுவதையும் தெரிந்துகொள்கிறார். பிறகு என்ன நடக்கிறது என்பது மீதி கதை. 'அதோமுகம்' என்றால், மனிதர்களின் இன்னொரு முகம் என்று பொருள். மனைவியின் இன்னொரு முகத்தைக் கண்டுபிடிக்கும் மார்ட்டின், தனது இன்னொரு முகத்தையும் அறிகிறார். அது என்ன முகம் என்பது சஸ்பென்ஸ். மலையாள பாணியில் அடுத்தடுத்த திருப்பங்களைக் கொடுத்து, விறுவிறுப்பான திரில்லர் படத்தை வழங்கியுள்ளார், இயக்குனர் சுனில் தேவ்.

கடைசி 15 நிமிடங்களில் முழு கதையையும் திருப்பிப் போடும் திரைக்கதை படத்துக்கு பெரிய பலமாக இருக்கிறது என்றாலும், அருண் பாண்டியனின் அறிமுகம் மூலம் அடுத்த பாகத்துக்கு லீட் கொடுத்திருப்பது செயற்கைத்தனமாக இருக்கிறது. மார்ட்டினாக நடித்துள்ள எஸ். பி.சித்தார்த், தனது கேரக்டருக்கு கச்சிதமாகப் பொருந்தியுள்ளார். மனைவியின் இன்னொரு முகத்தைக் கண்டு அதிர்ச்சி அடைவதை, தன் முகத்தில் நேர்த்தியாகக் கொண்டு வந்திருக்கிறார்.

இந்த பூனையும் பால் குடிக்குமா என்ற ரீதியில் அப்பாவி பெண்ணாக வந்து, கடைசியில் 'அடப்பாவி' என்று சொல்லும் மகளாக மாறி அசர வைத்துள்ளார், சைதன்யா பிரதாப். பெரும்பகுதி கதை இவர்களைச் சுற்றியே நகர்வதால், மற்ற கேரக்டர்கள் பெரிதாக மனதில் பதியவில்லை. அருண் விஜயகுமாரின் ஒளிப்பதிவு, எஸ்டேட்டின் குளுமையை இதமாக உணர வைக்கிறது. மணிகண்டன் முரளியின் பின்னணி இசை, கதையுடன் இணைந்து நேர்த்தியாகப் பயணித்துள்ளது.

# 'உள்ளூர் கிரிக்கெட் விவகாரத்தில் பிசிசிஐ முடிவை வரவேற்கிறேன்' – கபில் தேவ்



மும்பை : மார். 3,

**இந்திய ஆடவர் கிரிக்கெட் அணிக்கான வீரர்களின் ஆண்டு ஒப்பந்தத்தில் சர்வதேச போட்டிகளில் விளையாடாத சமயங்களில் உள்ளூர் கிரிக்கெட்டில் வீரர்கள் விளையாட வேண்டும் என பிசிசிஐ தெரிவித்திருந்தது. இந்த முடிவை தான் வரவேற்பதாக தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் கேப்டன் கபில் தேவ்.**

அண்மையில் வெளியான வீரர்களுக்கான ஆண்டு ஒப்பந்தத்தில் ஸ்ரேயஸ் ஐயர் மற்றும் இஷான் கிஷன் நீக்கப்பட்டனர். உள்ளூர் கிரிக்கெட்டில் தங்களது மாநில அணிக்காக அவர்கள் விளையாட மறுத்தது இதற்கு காரணமாக சொல்லப்பட்டது. இந்த முடிவை முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், விமர்சகர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆதரித்தும், விமர்சித்தும் இருந்தனர்.

"தேசத்தை விட யாரும் பெரியவர்கள் அல்ல என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. பிசிசிஐ-யின் இந்த முடிவு சில வீரர்களுக்கு இம்சை கொடுக்கலாம். இந்த முடிவின் மூலம் உள்ளூர் கிரிக்கெட்டை பிசிசிஐ காத்துள்ளது. சரியான நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நிச்சயம் உள்ளூர் கிரிக்கெட்டை மீட்டெடுக்கும் பாதையில் இது வலுவானதொரு நடவடிக்கை.

சர்வதேச போட்டிகளில் விளையாடும் வீரர்கள் உள்ளூர் போட்டிகளில் விளையாட தயாராக இருக்க வேண்டும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். அதனால் இதனை வரவேற்கிறேன்" என அவர் தெரிவித்துள்ளார்.

# கிரிக்கெட்டில் நானும் அந்தப் பிரச்சினையைச் சந்தித்தேன் : வீரர் நடராஜனின் கசப்பான அனுபவம்



மயிலாடுதுறை : மார். 3,

**"விளையாட்டோடு படிப்பும் மிகவும் முக்கியம். ஏனென்றால் சரியாக படிக்காததால், சர்வதேச போட்டிகளில் விளையாடும்போது மொழிப் பிரச்சினையை எதிர்கொண்டேன்", என்று கிரிக்கெட் வீரர் நடராஜன் தனது அனுபவத்தை மாணவர்களிடையே பகிர்ந்து கொண்டார்.**

மயிலாடுதுறையில் தனியார் கிரிக்கெட் அகாடமி திறப்பு விழாவில், தமிழகத்தைச் சேர்ந்த சர்வதேச கிரிக்கெட் வீரர் நடராஜன் கலந்துக் கொண்டார். அகாடமியை திறந்து மாணவ, மாணிவிகள் மத்தியில் பேசிய நடராஜன், "பள்ளியில் படிக்கும் போது வறுமையின் காரணமாக ஷூ வாங்க முடியாத நிலையில், வெறும் கால்களுடனே மூன்று வருடங்கள் பிராக்டிஸ் செய்தேன். வீட்டில் நல்ல உணவு கூட கிடையாது. பெற்றோர்கள் கூலி வேலை செய்துதான் 5 பேரை வளர்த்தனர். நாம் ஏதாவது ஒரு துறையை தேர்ந்தெடுத்து அதில் பயிற்சி பெற்றால் அதை யாரும் ஊக்குவிக்க மாட்டார்கள்.

எதிர்மறையான எண்ணத்தை தான் விதைப்பார்கள். அதேபோலதான் எனக்கும் செய்தனர். அன்று அவ்வாறு பேசியவர்கள்கூட இன்று நான் வெற்றியடைந்தவுடன் நான் நிச்சயமாக வளருவேன் என அப்போதே தெரியும் என இப்போது கூறுகின்றனர். நீங்கள் எந்த தொழிலை தேர்ந்தெடுத்தாலும் அதில் கடுமையாக உழைத்தால் கண்டிப்பாக வெற்றி கிட்டும். எனவே, நீங்கள் எப்போதும் மற்றவர்களுக்காக வாழ வேண்டாம். உங்களுக்கு பிடித்த விஷயத்தை குறித்து பயணம் செய்யுங்கள்.

இன்றைய தலைமுறை மாணவர்கள் விளையாட்டில் ஆர்வம் செலுத்தாமல் செல்போன் மோகத்தில் உள்ளனர். மாணவர்கள் விளையாட்டு, படிப்பு இரண்டுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும். நான் போதிய படிப்பின்மை காரணமாக மொழி பிரச்சினையால் பாதிக்கப்பட்டேன்.

பள்ளியில் படிக்கும்போது செங்கல் சூளை, கட்டட வேலை, ரோடுபோடும் வேலை என பல வேலைகளைச் செய்துள்ளேன். இதையெல்லாம் தடையாக எண்ணக்கூடாது. விளையாட்டுக்கு தடை நம் மனதில் உள்ள தாழ்வு மனப்பான்மை எண்ணங்கள்தான். கிரிக்கெட்டில் நான் வாங்கிய கோப்பைகளை வைக்க, நான் வசித்த சிறிய வாடகை வீட்டில் இடம் இல்லாமல் 400-க்கும் மேற்பட்ட கோப்பைகளை நண்பர்கள் வீட்டில் வைத்திருந்தேன்.

வாழ்வில் கஷ்டங்கள் இருந்தாலும் லட்சியத்தை நோக்கி பயணம் செய்யும்போது அது நிச்சயம் வெற்றி தரும். அந்த வெற்றி தரும் மகிழ்ச்சி அளப்பரியது. எல்லாத் துறைகளிலும் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. நீங்கள் அதை பெறுவதற்கான திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். நான் எனது சொந்த கிராமத்தில் கிரிக்கெட் மைதானம் தொடங்கியதற்கு காரணம் சுற்றுவட்டார கிராம மக்கள் அதனால் பயனடைய வேண்டும் என்பதே.

விளையாட்டுத் துறையில் ஈடுபடுபவர்கள் மட்டுமின்றி, அனைவருமே உடலை ஆரோக்கியமாக பேணி பாதுகாக்க வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். தன்னம்பிக்கை விடக்கூடாது. தோல்விகளை சந்திக்கும் போது தான் அடுத்த நிலையை எட்ட முடியும். எவ்வளவு உயரத்துக்கு சென்றாலும் தன்னடக்கம் வேண்டும்" என்று அறிவுறுத்தினார்.

# "ரஜத் படிதாரை நீக்கிவிடாதீர்கள், வாய்ப்பு கொடுங்கள்" – ஏ.பி.டிவில்லியர்ஸ்



தரம்சலா : மார். 3,

**தரம்சலாவில் நடைபெறவிருக்கும் இங்கிலாந்துக்கு எதிரான 5-வது டெஸ்ட் போட்டியில் ரஜத் படிதாருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும். அவருக்கு இன்னும் சில வாய்ப்புகள் வழங்கிய பிறகே முடிவுக்கு வர வேண்டும் என்று தென் ஆப்பிரிக்க லெஜண்ட், 360 டிகிரி பேட்டர் ஏ.பி. டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.**

இங்கிலாந்துக்கு எதிராக கோலி ஆடவில்லை என்பதால் வாய்ப்பு பெற்ற ரஜத் படிதார், உள்நாட்டு கிரிக்கெட் தொடர்களில் குறிப்பாக ரஞ்சி போட்டிகளில் எக்கச்சக்கமாக ரன்களைக் குவித்ததையடுத்து வாய்ப்பு பெற்றார். ஆனால் இங்கிலாந்துக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகளில் அவர் மொத்தமே 63 ரன்களை 10.5 என்ற சராசரியில் எடுக்க, அணியில் அவரது இடம் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

கிரிக்கெட் வல்லுநர்களும் விஷயமறியா சமூக ஊடக ட்ரோல் படையும் ரஜத் படிதாரை நீக்க வேண்டும் என்று குரல் எழுப்பி வருகின்றனர். இந்திய அணி ஏற்கெனவே 3-1 என்று டெஸ்ட் தொடரை வென்றுள்ள நிலையில் 5வது டெஸ்ட் போட்டியில் தேவ்தத் படிக்கல், ரஜத் படிதார் இடத்தில் இறக்கப்படுவார் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில், தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டனும், 360 டிகிரி வீரர் என அழைக்கப்படுபவருமான ஏ.பி.டிவில்லியர்ஸ் இது தொடர்பாகக் கூறியதாவது: ரஜத் படிதாருக்கு இந்த தொடர் வாழ்க்கையின் நினைவில் கொள்ள விரும்பத் தகாத தொடராகியுள்ளது. ஆனால் இந்திய அணியின் பெரிய விஷயம் என்னவெனில் மற்றவர்கள் அபாரமான ஆட்டத்தை ஆடி அணிக்கு வெற்றி தேடித் தரும் நிலையில் ரஜத் படிதார் தோல்வியடைந்தாலும் அணியில் நீடிக்க வாய்ப்பு உள்ளது.

அவரது குணாதிசியமும் அணுகுமுறையும் ஈர்க்கக் கூடியதாக இருந்தால், ஒய்வறையில் படிதாரை அனைவருக்கும் பிடித்திருந்தால் ரோகித் சர்மாவும் அணித் தேர்வுக்குழுவும் நிச்சயம் 'படிதார் எதிர்கால இந்திய அணிக்குத் தேவை, அணியின் ஒரு அங்கமாக அவரை பார்க்கிறோம்' என்று அவரைத் தக்க வைக்க வாய்ப்புள்ளது. அவர் ரன்களை உடனடியாக எடுக்கவில்லை என்றாலும் இன்னும் கொஞ்சம் வாய்ப்புகளை அளிப்போம்' என்று கருத இடமுண்டு.

இந்திய அணியில் இளம் வீரர்கள் நன்றாக ஆடுவது அந்த அணிக்கு மிக நல்லது. இது இந்திய அணியில் நல்ல சூழல் நிலவுவதை எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு முறையும் இளம் வீரர் அணிக்குள் நுழைந்து அணியின் தேவைகளுக்கு ஏற்ப ஆடுவது என்பது நல்ல சூழ்நிலை இருந்தால்தான் நடக்கும் என்று கூறினார்.

மார்ச் 7ம் தேதி தரம்சலாவில் கடைசி டெஸ்ட் தொடங்குகிறது. தொடரை இந்திய அணி ஏற்கெனவே வென்றாலும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டிக்கான 12 புள்ளிகளைப் பெற இரு அணிகளும் மோதும். எனவே கடைசி டெஸ்ட் சம்பிரதாய இறுதி டெஸ்ட் போட்டியாக இருக்காது என்பது உறுதி.

# ஸ்ருதிஹாசன் குரலில் உருவாகும் 'காதலிக்க நேரமில்லை' படத்தின் முதல் பாடல்



சென்னை : மார். 3,

**கிருத்திகா உதயநிதி இயக்கும் 'காதலிக்க நேரமில்லை' படத்தின் முதல் பாடலை ஸ்ருதிஹாசன் பாடியுள்ளார்.**

சிவா, பிரியா ஆனந்த் நடித்த 'வணக்கம் சென்னை' படம் மூலம் இயக்குநர் ஆனவர் கிருத்திகா உதயநிதி. அடுத்து விஜய் ஆண்டனி நடித்த 'காளி', 'பேப்பர் ராக்கெட்' என்ற வெப்தொடர் ஆகியவற்றை இயக்கினார். அடுத்து அவர் இயக்கும் படத்தில் ஜெயம் ரவி, நித்யா மேனன் ஜோடியாக நடித்துள்ளனர். யோகிபாபு, டி.ஜே.பானு, ஜான் கொக்கேன் உட்பட பலர் நடிக்கின்றனர். ரெட் ஜெயன்ட் நிறுவனம் தயாரிக்கிறது. ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார்.

இந்தப் படத்துக்கு 'காதலிக்க நேரமில்லை' என பெயர் வைத்துள்ளனர். தமிழில் இதற்கு முன் ஸ்ரீதர் இயக்கத்தில் 1964-ம் ஆண்டு இதே தலைப்பில் படம் வெளியாகி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இப்படத்தின் பாடல் பதிவு குறித்த அப்டேட்டை கிருத்திகா உதயநிதி வெளியிட்டுள்ளார். படத்தின் முதல் பாடலை ஸ்ருதிஹாசன் பாடியுள்ளார். சிநேகன் பாடலை எழுதியுள்ளார். "முதல் பாடல் பதிவு மகிழ்ச்சியாக நடந்தது" என கிருத்திகா உதயநிதி தெரிவித்துள்ளார்.

# பல நாட்கள் தூங்காமல் தவித்தேன் : நடிகை இலியானா



மும்பை : மார். 3,

**'பல நாட்கள் தூங்காமல் தவித்தேன், எனக்கான நேரம் என்பதே கிடைக்கவில்லை. செல்ஃபி எடுத்து ரொம்ப நாட்கள் ஆகிவிட்டது எனப் புரிந்தது. உண்மையில் தாய்மை கடினம்தான்' என நடிகை இலியானா கூறியுள்ளார்.**

தனக்குத் திருமணம் நடந்தது, தனது கணவர் யார் என்பது போன்ற விவரங்களை நடிகை இலியானா நீண்ட காலமாகவே வெளியுலகுக்கு சொல்லாமல் வைத்திருந்தார். பின்பு திடீரென ஒருநாள் தான் கர்ப்பமாக இருப்பதாக அறிவித்தது அவரது ரசிகர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆண்குழந்தை பிறந்தபின்னரே தனது கணவர் யார் என்பதை இலியானா அறிவித்தார். பாலிவுட் நடிகை கத்ரீனா கைஃபின் சகோதரர் மைக்கேல் டோலன் தான் அவரது கணவர். இந்த நிலையில், குழந்தை பிறந்த பிறகு தனது வாழ்க்கை எப்படி மாறியிருக்கிறது என்பது குறித்து நடிகை இலியானா பகிர்ந்துள்ளார்.

தனது சமூகவலைதளப் பக்கத்தில், 'நான் செல்ஃபி எடுத்து நீண்ட நாளாகி விட்டது என்று உணர்ந்தேன். முழுநேரம் குழந்தையைப் பார்த்துக் கொண்டு இப்போது வீட்டிலேயே இருந்தாலும் எனக்கான நேரம் கிடைக்கவில்லை. பெரும்பாலும் பைஜாமாவிலும் குழந்தை என் முடியை இழுத்து விடக்கூடாது என்று அள்ளி முடிந்த கூந்தலுமாக இருக்கிறேன். பல நாட்கள் தூங்காமலும் இருந்திருக்கிறேன். உண்மையில் தாய்மை கடினமான பயணம்.

இதை நான் குறையாக சொல்லவில்லை. என் குழந்தை எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பரிசு. ஆனால், குழந்தைப் பிறப்புக்குப் பின்பு அதனால் வரும் மன அழுத்தம் மிகப்பெரிய விஷயம். அது குறித்து நாம் பேசவேண்டும். நிச்சயம் இப்போதுள்ள வாழ்க்கைக் குறித்து நான் உங்களுடன் பேசுவேன். விரைவில் திரும்பி வருவேன். சில அம்மாக்களைப் போல உடனே என்னால் வர முடியவில்லை. ஆனால், பொறுமையாக நலமுடன் திரும்பி வருவேன்' எனக் கூறியுள்ளார்.

# மலையாள படத் தலைப்பில் 'பாரத்' என்பதை தவிர்க்க சென்சார் போர்டு உத்தரவு



திருவனந்தபுரம் : மார். 3,

**மலையாளத்தில் வெளியாக உள்ள படம் ஒன்றின் தலைப்பில் இடம்பெற்றுள்ள 'பாரத்' என்ற வார்த்தையை தவிர்க்குமாறு படக்குழுவுக்கு சென்சார் போர்டு உத்தரவிட்டுள்ளது.**

டி.வி.ரஞ்சித் இயக்கத்தில் உருவாகியுள்ள மலையாள படம் 'ஒரு பாரத சர்கார் உல்பணம்'. இந்தப் படத்தில் சுபிஷ் சுதி, ஷெல்லி, கவுரி கிஷன், அஜு வர்கீஸ், வினீத் வாசுதேவ் மற்றும் ஜாஃபர் இடுக்கி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அஜ்மல் ஹஸ்புல்லா படத்துக்கு இசையமைத்துள்ளார். இப்படம் வரும் மார்ச் 8-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இப்படத்தைப் பார்த்த சென்சார் போர்டு அதிகாரிகள், படத்தின் தலைப்பில் உள்ள 'பாரத்' என்ற வார்த்தையை தவிர்த்தால் மட்டுமே சான்றிதழ் கொடுக்க முடியும் என தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

படத்தை குறிப்பிட்ட தேதியில் வெளியிட வேண்டும் என்பதால் தணிக்கை குழுவின் உத்தரவுக்கு படக்குழுவினர் செவிசாய்க்க உள்ளதாக கூறப்படுகிறது. காரணம் இப்படம் மார்ச் 1-ம் தேதி வெளியாக இருந்தது. திரையரங்க உரிமையாளர்கள் போராட்டம் காரணமாக படம் 8-ம் தேதிக்கு மாற்றப்பட்டது. இதற்கு மேலும் தாமதப்படுத்த முடியாது என்பதால் தலைப்பில் உள்ள 'பாரத்' என்ற வார்த்தையை படக்குழுவினர் நீக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ரஷிய எதிர்க்கட்சி தலைவர் நவால்னியின் உடல் அடக்கம் – ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



**மாஸ்கோ : மார். 3,**

**சிறையில் மர்மமான முறையில் இறந்த நவால்னியின் உடல் பலத்த போலீஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அடக்கம் செய்யப்பட்டது.**

ரஷிய எதிர்க்கட்சி தலைவரும், அதிபர் புதினின் தீவிர எதிர்ப்பாளருமான அலெக்சி நவால்னிக்கு பல்வேறு வழக்குகளில் 19 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதனால் அவர் கடந்த 2021-ம் ஆண்டு முதல் ஆர்க்டிக் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இந்த சூழலில் கடந்த மாதம் 17-ந் தேதி அவர் திடீரென சிறையிலேயே மரணமடைந்தார். அவரது உயிரிழப்புக்கான காரணம் தற்போதுவரை தெரிவிக்கப்படவில்லை.

நவால்னி மர்மமான முறையில் சிறையில் மரணம் அடைந்த சம்பவம் உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனிடையே அலெக்சி நவால்னியின் உடலை ரஷிய அரசு தங்களிடம் ஒப்படைக்க மறுப்பதாக நவால்னியின் மனைவி மற்றும் தாயார் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த நிலையில் நீண்ட இழுபறிக்கு பிறகு நவால்னியின் உடல் அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை தொடர்ந்து, மாஸ்கோவின் தென்கிழக்கு மரியினோ மாவட்டத்தில் உள்ள ஒரு தேவாலயத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நவால்னியின் இறுதி சடங்கு நடைபெற்றது. அதன் பின்னர் தேவாலயத்துக்கு அருகில் உள்ள மயானத்தில் நவால்னியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அலெக்சி நவால்னி அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு வெளியே, சில ஆதரவாளர்கள் அவரது பெயரை தொடர்ந்து உச்சரித்து கொண்டே இருந்தனர். மேலும் சிலர் கிரெம்ளினுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். ஆயிரக்கணக்கானோர் அவரது இறுதிச் சடங்கில் பங்கேற்றனர்.

# அமெரிக்காவில் இந்திய நடனக் கலைஞர் அமர்நாத் கோஷ் சுட்டுக் கொலை



**வாஷிங்டன் : மார். 3,**

**இந்தியாவைச் சேர்ந்த நடனக் கலைஞர் அமர்நாத் கோஷ், அமெரிக்காவில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. போலீஸார் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.**

அமெரிக்காவில் படிக்கும் இந்தியர்கள் சந்தித்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்கள் வெளியாகி வரும் நிலையில், இந்தியாவைச் சேர்ந்த அமர்நாத் கோஷ் என்ற நடனக் கலைஞர், மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவைச் சேர்ந்தவர் அமர்நாத் கோஷ். இவர் ஒருசிறந்த பரதநாட்டியம் மற்றும் குச்சுப்புடி நடனக் கலைஞர் ஆவார்.

சென்னையில் உள்ள கலாஷேத்ரா அகாடமியின் முன்னாள் மாணவரான இவர், டெல்லியில் உள்ள சர்வதேச கலாச்சார அமைச்சகத்திடம் இருந்து குச்சிப்புடிக்கான தேசிய உதவித் தொகையையும் பெற்றுள்ளார். மேலும், புகழ்பெற்ற நடனக் கலைஞர்களான போபிதா டே சர்க்கார், ஸ்ரீ எம். வி.நரசிம்மாச்சாரி, பத்மஸ்ரீ அடையார் கே.லக்ஷ்மண் ஆகியோரிடம் பயிற்சி பெற்றவர்.

இவருடைய பெற்றோர் இறந்துவிட்டனர். அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் உள்ள வாஷிங்டன் பல்கலைக்கழகத்தில் நகரில் MFA படித்து வந்தார். அங்கு அவர், படித்து வந்த கல்வி நிலையம் அருகே நடைபயிற்சியில் ஈடுபட்டு இருந்தபோது, மர்ம நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இதனை அவரது நண்பரும், தொலைக்காட்சி நடிகையுமான தேவலீனா பட்டாச்சார்ஜி, சிக்காகோவில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இதனையடுத்து, இந்திய தூதரகம் வெளியிட்ட தகவலில், “அமர்நாத் கோஷ் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம். போலீஸார் மற்றும் தடயவியல் நிபுணர்களின் அறிக்கையை கவனித்து வருகிறோம்” என தெரிவித்துள்ளது. மேலும், “அமர்நாத் கோஷின் உறவினர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும். இந்தச் சம்பவத்தை போலீஸார் மற்றும் கல்வி நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடப்பு ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் ஐந்து இந்திய மாணவர்கள் வெவ்வேறு சம்பவங்களில் இறந்ததாகக் கூறப்படுகிறது.

# மாணவி கொலையில் சட்டவிரோத குடியேற்றத்தை ஊக்குவிப்பதாக பைடனை தாக்கும் டிரம்ப்



**அமெரிக்கா : மார். 3,**

**அமெரிக்காவின் தென்கிழக்கில் உள்ள மாநிலம் ஜியார்ஜியா. இதன் தலைநகரம், அட்லான்டா. பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த லேக்கன் ஹோப் ரைலி எனும் 22 வயது மாணவி காலையில் உடற்பயிற்சி ஓட்டத்திற்கு சென்றவர் திரும்பவில்லை.**

இதையடுத்து அவருடன் தங்கி இருந்த மாணவிகள், புகார் செய்ததையடுத்து, காவல்துறை அவரை தேடி வந்தது. அவர்கள் தேடலில் மரங்களடர்ந்த பகுதியில் ரைலியின் உடல் கண்டெடுக்கப்பட்டது. விசாரணையில், கண்காணிப்பு கேமிரா காட்சிகளை வைத்து ஜோஸ் அன்டோனியோ இபார்ரா என்பவரை சந்தேகத்தின் பேரில் காவல்துறை கைது செய்து விசாரித்தனர். தீவிர விசாரணையில் ஜோஸ், லேக்கனை தாக்கி கொலை செய்தது தெரிய வந்துள்ளது. ஜோஸ் தாக்கும் போது, சமாளித்த லேக்கன், உடனடியாக 911 எனும் அவசர உதவிக்கான எண்ணை லேக்கன் அழைக்க முயன்றதாகவும், அதில் பதட்டமடைந்த ஜோஸ் அவரை கொலை செய்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

லேக்கனின் பிரேத பரிசோதனையில் உயிரிழப்பதற்கு முன்பாக அவர் ஜோசுடன் தீவிரமாக போராடிய அறிகுறிகள் தெரிந்தன. வெனிசுயலா நாட்டை சேர்ந்த ஜோஸ், 2022ல் அமெரிக்காவிற்குள் சட்ட விரோதமாக நுழைந்தவர் என்பதும் தெரிய வந்துள்ளது. இவ்வருட இறுதியில் அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தற்போதைய அதிபர் ஜோ பைடனும், முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பும் ஒருவரையொருவர் எதிர்த்து தீவிரமாக களம் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த பைடன் ரைலி மரணம் குறித்து ஏதும் பேசவில்லை. பைடனை குற்றம்சாட்டி டெக்சாஸ் மாநில பிரச்சார உரையில் பேசிய டிரம்ப் தெரிவித்ததாவது: நிலைகுலைந்து போயிருக்கும் ரைலியின் பெற்றோர்களுடன் தொலைபேசியில் பேசினேன். சட்டவிரோதமாக குடியேறுபவர்களை பைடன் தடுக்க தவறியதால்தான் இது போன்ற குற்றங்கள் நடைபெறுகின்றன. பைடனை போன்ற ஒரு திறமையில்லாத அதிபரை அமெரிக்கா இதுவரை கண்டதில்லை. தனது பிரச்சாரத்தில் பைடன், ரைலியின் பெயரை கூட உச்சரிக்கவில்லை. ஆனால், நான் ரைலியை மறக்க மாட்டேன்.” என்று டிரம்ப் கூறினார்.

ஜியார்ஜியா மக்களை ரைலியின் கொலைச் சம்பவம் அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிலையில், அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களினால் தோன்றும் பிரச்சனைகள், அமெரிக்காவில் தீவிர விவாதத்தை கிளப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மும்பை தாக்குதல் லஷ்கர்–இ–தொய்பா பயங்கரவாத அமைப்பின் முக்கிய குற்றவாளி பாகிஸ்தானில் மர்மமான முறையில் உயிரிழப்பு



**லாகூர் : மார். 3,**

**மும்பை தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி மர்மமான முறையில் உயிரிழந்தார்.**

இந்தியாவின் மராட்டிய மாநிலம் மும்பையில் 2008-ம் ஆண்டு நவம்பர் 26-ம் தேதி அடுத்தடுத்து பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றன. பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தினர். மும்பை தாக்குதலில் 166 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய 9 பயங்கரவாதிகள் பாதுகாப்புபடையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் தலைவன் ஹபீஸ் சயது என்ற பயங்கரவாதி மூளையாக செயல்பட்டுள்ளான். ஹபீஸ் சயது தற்போது பாகிஸ்தானில் அந்நாட்டு ராணுவ பாதுகாப்பில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே, மும்பை தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் மர்மமான முறையில் உயிரிழக்கும் சம்பவங்கள் சமீப காலமாக நடைபெற்று வருகின்றன. துப்பாக்கியால் சுட்டும், விஷம் கொடுத்தும் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுவரும் நிலையில் இந்தியா இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், மும்பை தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் உளவுப்பிரிவு தலைவன் மர்மமான முறையில் உயிரிழந்தார். 70 வயதான பயங்கரவாதி அசிம் சீமா மும்பை தாக்குதலுக்கு திட்டம் தீட்டிய பயங்கரவாதிகளில் ஒருவன் ஆவார். பாகிஸ்தானின் பைசலாபாத் நகரில் வசித்துவந்த பயங்கரவாதி அசிம் சீமா மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். பயங்கரவாதி அசிம் சீமா மாரடைப்பால் உயிரிழந்ததாக கூறப்படும் நிலையில் இந்த சம்பவத்தில் இந்தியாவுக்கு தொடர்பு இருக்குமா? என சந்தேகம் எழுந்துள்ளது.

# காசா மக்களுக்கு அமெரிக்க ராணுவம் மூலம் வான்வழியாக நிவாரணப் பொருட்கள் : ஜோ பைடன் அறிவிப்பு



**அமெரிக்கா : மார். 3,**

**இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் காரணமாக காசா மிகப்பெரிய பாதிப்பை அடைந்துள்ளது. அங்குள்ள பொதுமக்கள் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். வடக்கு காசாவில் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். பட்டினியால் உயிரை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.**

இதனால் அவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இஸ்ரேல் ராணுவம் அனுமதித்தால் மட்டுமே மனிதாபிமான அடிப்படையிலான் உதவிப் பொருட்கள் அங்குள்ள மக்களுக்க சென்றடையும் நிலை உள்ளது. இந்த நிலையில்தான் காசாவின் மேற்கு பகுதியில் நிவாரணப் பொருட்கள் வழங்க இஸ்ரேல் ராணுவம் சம்மதம் தெரிவித்தது. லாரிகளில் நிவாரணப் பொருட்கள் சென்றது. அப்போது லாரிகளை முற்றுகையிட்டு உணவுப் பொருட்களை வாங்க மக்கள் முண்டியடித்தனர்.

அப்போது பாதுகாப்பிற்கான நின்றிருந்த இஸ்ரேல் ராணுவத்தை நோக்கி மக்கள் வந்ததாகவும், தங்களுக்கு எதிராக தாக்குதல் மிரட்டல் என நம்பியதாகவும் கூறி கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியதா இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. இதனால் 100-க்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர். 700-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்திற்கு ஐ.நா. கடும் கண்டனம் தெரிவித்தது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் உடனடியாக போர் நிறுத்தம் தேவை என வலியுறுத்தினர். இந்த நிலையில் காசாவில் அமெரிக்க ராணுவம் வான்வழியாக உதவிப் பொருட்களை காசா மக்களுக்கு வழங்கும். மேலும் என்னென்ன வழிகள் இருக்கிறது. அவைகள் அனைத்தும் ஆராயப்படும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். ஜோர்டான் மற்றும் சில நாடுகளுடன் இணைந்து இந்த பணியில் ஈடுபடப்போவதாக ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# பிரிவினை எனும் விஷத்தை விதைப்பவர்களை எதிர்க்க ஒன்றுபட வேண்டும் : ரிஷி சுனக்



**பிரிட்டன் : மார். 3,**

**இஸ்ரேல்-ஹமாஸ் போர் 5-வது மாதத்தை நெருங்கி வரும் நிலையில் உலகெங்கும் இரு தரப்பினருக்கும் ஆதரவாக மக்கள் ஆங்காங்கே கருத்து கூறி வருகின்றனர்.**

இங்கிலாந்தில், இரு தரப்பினரில் ஒருவரை ஆதரிப்பவர்களால் மற்றொரு தரப்பினர் விமர்சிக்கப்படுவது தீவிரமாகி வருகிறது. ஒரு சில இடங்களில் போராட்டங்களும், வன்முறை சம்பவங்களும் நடந்து வருகிறது. மேலும், சில பாராளுமன்ற உறுப்பினர்களின் இஸ்ரேல்-ஹமாஸ் போர் குறித்த கருத்துகளுக்கு எதிராக அவர்களின் இல்லங்களுக்கு எதிரில் போராட்டங்கள் நடந்தன. இந்நிலையில், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், லண்டன் நகரின் 10, டவுனிங் தெருவில் உள்ள தனது அதிகாரபூர்வ இல்ல வாசலில் நாட்டு மக்களுக்கு இதுகுறித்து உணர்ச்சிகரமாக உரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்திருப்பதாவது: நாட்டின் முதல் வெள்ளையரல்லாத பிரதமராக உங்கள் முன் நான் நிற்கிறேன். பயங்கரவாத சித்தாந்தங்களில் நம்பிக்கை உடையவர்களால் இங்கிலாந்தின் ஜனநாயகமே அழியும் நிலையில் உள்ளது. நம் நாட்டிற்குள் நெடுங்காலமாக தங்கியுள்ள அயல்நாட்டினர், நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களின் பங்கை முழுமையாக அளித்துள்ளனர்.

நீங்கள் இந்துவாக இருந்தும் என்னை போல் ஒரு பெருமைக்குரிய இங்கிலாந்து நாட்டினராக இருக்கலாம்; ஒரு இறை நம்பிக்கைமிக்க முஸ்லீமாக இருந்து தேசபக்தி மிகுந்த பிரிட்டன் குடிமகனாகவும் இருக்கலாம்; யூத அல்லது கிறித்துவ மதத்தை சேர்ந்தவராகவும் இருந்து நாட்டுபற்று மிக்கவராக இருக்கலாம். அது நம் நாட்டில் சாத்தியமே. இனத்தால், கலாச்சாரத்தால் மாறுபட்டாலும் ஒன்றுபட்ட பிரிட்டனாக நாம் இருப்பதுதான் நமது சாதனையே.

பிரிட்டனின் தெருக்களில் ஜனநாயகத்தை சூறையாடும் குரல்கள் ஒலிக்கு தொடங்கி உள்ளது. வன்முறையை ஏதோவொரு வகையில் நியாயப்படுத்தும் அணிகள் உருவாகிவருகின்றன. நம்மை பிரித்து நமது மனங்களில் விஷத்தை விதைக்க நினைக்கும் சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ரிஷி சுனக் கூறினார்.

# 217 வருடங்களுக்கு முந்தைய போரில் கைப்பற்றப்பட்ட டென்மார்க் ஸ்வெட்டர்



**பிரிட்டன் : மார். 3,**

**1807 காலகட்டத்தில் ஐரோப்பிய நாடான டென்மார்க்கிலிருந்து, ஃபேரோ தீவுகள் ஜலசந்திக்கு ஆன்-மேரி எனும் கப்பல் புறப்பட்டது. அப்போதைய டென்மார்க் மன்னருக்கு சொந்தமான 2 கப்பல்களில் ஆன்-மேரி கப்பலும் ஒன்று.**

பிரான்ஸ் நாட்டு மன்னராக இருந்த நெப்போலியனுக்கும், பிற ஐரோப்பிய நாடுகளின் கூட்டணிக்கும் போர் நடந்த அந்த காலத்தில் ஆன்-மேரி கப்பல், தனது பயணத்தின் போது, செப்டம்பர் 2 அன்று ஹெச்எம்எஸ் டிஃபென்ஸ் எனும் இங்கிலாந்து கடற்படை கப்பலால் தாக்கப்பட்டது. அந்த தாக்குதலை எதிர்கொள்ள முடியாத ஆன்-மேரி கப்பலை அப்போதைய போர் மரப்புப்படி, தாக்குதலில் வென்ற இங்கிலாந்து கடற்படை, அதில் இருந்த சரக்குகள் மற்றும் தபால்களுடன் கைப்பற்றியது.


அந்த பொருட்கள் இங்கிலாந்திற்கு கொண்டு செல்லப்பட்டன. அவையனைத்தும் தற்போது வரை இங்கிலாந்தின் தேசிய காப்பகத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வந்தன. சுமார் 200 வருடங்கள் கடந்த நிலையில், அக்கப்பலின் பொருட்கள் தற்போது முதல்முறையாக ஃபேரோ தீவுகளை சேர்ந்த பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னிலையில் இங்கிலாந்தில் திறக்கப்பட்டன.

49 ஆயிரம் ஜோடி கம்பளியினால் பின்னப்பட்ட “ஸாக்ஸ்”கள், பல பறவைகளின் இறகுகள், மற்றும் ஒரு பார்சலும் அந்த பொருட்களில் இருந்தன. அந்த பார்சலை பிரித்த போது, அதில் இயந்திர உதவியின்றி, கைகளாலேயே பின்னப்பட்ட ஒரு அழகிய ஸ்வெட்டர், தற்போது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அக்கால ஃபேரோ தீவுகளின் பாரம்பரியத்தை உணர்த்தும் வகையில், ஒளிரும் வண்ணத்தில் காண்போர் கண்களை அந்த ஸ்வெட்டர் கவர்கிறது.

200 வருடங்கள் கடந்தும் அதன் தரம், வடிவம், வண்ணம், மற்றும் வேலைப்பாடு சிறிதும் குறையாமல் அப்படியே இருப்பது காண்போரை வியக்க வைத்தது. 1807 ஆகஸ்ட் 20 அன்று டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனை சேர்ந்த லேட்சன் என்பவருக்கு நீல்ஸ் வின்தர் எனும் கார்பென்டர் அனுப்பியுள்ள இந்த பார்சலுடன் டேனிஷ் மொழியில் வின்தர் அனுப்பியுள்ள கடிதமும் இருந்தது.

அதில், “உங்களுக்கு எனது மனைவியின் வாழ்த்துக்கள். உங்கள் வருங்கால மனைவிக்கு என் மனைவி ஒரு ஸ்வெட்டரை இத்துடன் அனுப்பியுள்ளார். உங்கள் வருங்கால மனைவிக்கு இது பிடிக்கும் என நாங்கள் நம்புகிறோம்” என எழுதப்பட்டுள்ளது. இந்த ஸ்வெட்டர் கலைப்பொருளாக இங்கிலாந்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட உள்ளது.

# பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் ஆசிப் அலி சர்தாரிக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தினார் இம்ரான் கான்



**இஸ்லாமாபாத் : மார். 3,**

**பாகிஸ்தானில் கடந்த மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. நவாஸ் ஷெரீப் கட்சியும், பிலாவல் பூட்டோ கட்சியும் இணைந்து ஆட்சி அமைக்க முடிவு செய்துள்ளன. பிப்ரவரி 8-ந்தேதி தேர்தல் நடைபெற்ற போதிலும் இதுவரை அரசு அமைக்கப்படவில்லை.**

நவாஸ் ஷெரீப் - பிலாவல் கட்சிகளின் சார்பில் நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அதேவேளையில் ஆசிப் அலி சர்தாரி அதிபர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் ஆசிப் அலி சர்தாரிக்கு எதிராக இம்ரான் கான், முகமது கான் அசாக்ஜாய்-ஐ அவரது கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராக அறிவித்துள்ளார்.

முகமது கான் அசாக்ஜாய் பஸ்துன்-க்வா மிலி-அவாமி கட்சியின் தலைவர் ஆவார். சன்னி இத்தேஹாட் கவுன்சில் ஆதரவு பெற்றவர். சிறையில் அடைக்கப்பட்டுள்ள இம்ரான் கான், அதிபர் தேர்தலில் முகமது கான் அசாக்ஜாய்க்கு வாக்களிக்கும்படி தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புப்படி மார்ச் 9-ந் தேதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்தாரி நேற்று வேட்மனு தாக்கல் செய்திருக்கிறார். தற்போது அதிபராக இருக்கும் ஆரிப் அல்வியின் பதவிக்காலம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்தது. ஆனால், அரசியல் அசாதார சூழ்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் அவர் தொடர்ந்து பதவியில் நீடித்து வருகிறார். பாகிஸ்தான் தேர்தல் விதிப்படி பாராளுமன்ற உறுப்பினர்கள், செனட் மற்றும் நான்கு மாகாண உறுப்பினர்கள் வாக்களிக்க தகுதியானர்கள்.

# பாராளுமன்ற மின்கட்டண பாக்கிக்காக மின்சாரம் “கட்” லிஃப்டில் சிக்கிய உறுப்பினர்கள்



**கானா : மார். 3,**

**மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நாடு, கானா. இதன் தலைநகரம் அக்ரா. அந்நாட்டு பாராளுமன்றத்தில் அதிபர் நானா அகுஃபோ அட்டோ நாட்டுமக்களுக்கு உரையாற்றி கொண்டிருந்தார்.**

அப்போது பாராளுமன்றத்தில் மின்சாரம் தடைபட்டது. உடனடியாக மின்சாரம் திரும்பும் என நினைத்து உறுப்பினர்கள் அமர்ந்திருந்த நிலையில், மின்சாரத்தடை நீடித்தது. இதையடுத்து அங்கிருந்து உறுப்பினர்கள் அனைவரும் அக்கன் மொழியில் “மின்சார தடை” எனும் பொருள்பட “டம்சர், டம்சர்” என கோஷமிட தொடங்கினர்.

சில நிமிடங்கள் கடந்ததும், உறுப்பினர்கள் அமர்ந்திருந்த சபைக்கு மட்டும் ஜெனரேட்டர் உதவியுடன் மின்சார சேவை மீண்டும் தொடர்ந்தது. ஆனால், மின்சார சேவை பாராளுமன்றத்தின் பிற பகுதிகளுக்கு வரவில்லை. இதனால் லிஃப்டில் பயணித்த பல உறுப்பினர்கள் அதிலேயே சிக்கிக் கொள்ள நேர்ந்தது.

“பாராளுமன்ற அலுவலகம் செலுத்த வேண்டிய மின்கட்டண பாக்கியை வசூலிக்க பல முறை நோட்டீஸ் அனுப்பியும் கட்டணத்தை செலுத்தாததால் மின் தொடர்பை துண்டித்தோம். மின் தடை என்பது கட்டணம் செலுத்தாத அனைவருக்கும்தான். கட்டணம் செலுத்தாதவர்கள் யாராக இருந்தாலும் மின்சார சப்ளை துண்டிக்கபப்டும்” என எலக்ட்ரிசிட்டி கம்பெனி ஆஃப் கானா எனும் அந்நாட்டு மின்சார நிறுவன செய்தித் தொடர்பாளர் வில்லியம் போடெங் தெரிவித்தார்.

கடும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அந்நாட்டின் அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வாங்க கானா அரசால் முடியவில்லை. நாளின் பிற்பகுதியில் கட்டணத்தின் ஒரு பகுதியை செலுத்திய பிறகே மின் தொடர்பு மீண்டும் வழங்கப்பட்டது. கானா அரசு மின்சார துறைக்கு $1.8 மில்லியன் அளவிற்கு கட்டண பாக்கி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாஜக வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு வாரணாசியில் மீண்டும் மோடி





# மாரடைப்பு பாதிப்புகளுக்கு கோவிட் தடுப்பூசி காரணமல்ல ;மத்திய அரசு

# பெங்களூரு குண்டுவெடிப்பைத் தொடர்ந்து டெல்லியில் உஷார் நிலை





| சென்னை / புதுக்கோட்டை | 03.03.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

03.03.2024 ஞாயிறு

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜம்சேத்ஜீ டாட்டா , இந்தியத் தொழிலதிபர் (பி.1839) (இ.1904)



சி. சிவஞானசுந்தரம் , ஈழத்து இதழியலாளர், எழுத்தாளர் (பி.1924) (இ.1996)



லதா ரஜினிகாந்த் , இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர், பின்னணிப் பாடகி (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

கடம்பி மீனாட்சி , இந்திய வரலாற்றாய்வாளர் (பி.1905) (இ.1940)



குமாரதுங்க முனிதாச , சிங்களக் கவிஞர், பத்திரிகையாளர் (பி.1887) (இ.1944)



சி. சிவஞானசுந்தரம் , ஈழத்து இதழியலாளர், எழுத்தாளர் (பி.1924) (இ.1996)



## உலகக் காட்டுயிர் நாள்